ஸம்புடம் 13
ஸஞ்சிகை 2

ஸ்ரீ:

விஜய வூ
மாசி மீ

556

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரி

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0—4—0

FEBRUARY 1954
VOL 13 NO 2.

JL
Q22m211,N41SH
N54.13.2
2544

ஶ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	32
2. புத்தக விமர்சனம்	38
3. திருப்பாவைக்கதை [ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]	39
4. அபீதிஸ்தவம் [ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	43
5. ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள் [ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்யஸ்வாமி, வேதாந்தசிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை தலைமை ஆசிரியர், பாதூர்.]	47
6. செய்திகள்	50
7. ஸ்வாகதபத்ரிகைகள்	54
8. திரு எவ்வுள்ளூரில் மஹோத்ஸவங்கள் [ஸ்ரீ. உப. A. T. துரைஸ்வாமி ஐயங்கார், B. A., L. T., மிஷின் ஹைஸ்கூல், திருவுள்ளூர்.]	59
9. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	59

ஸ்ரீ:

நித்யாநுஸந்தானம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் **43**-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும்
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகனின்
திவ்ய நியமநத்தின்பேரில் ப்ரசுரிக்கப்பட்டது.

ஸ்ரீ அஹோபிலமடம் ஸந்நிதியில் காலை விச்வரூபம் முதற்கொண்டு ராத்ரி திருவாராதனமுடிவுபர்யந்தம் அநுஸந்திக்கப்பட்டுவரும் ஸேவாக்ரமங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 9.

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ், திருவுள்ளூர்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } **விஜய ௵ மாசி ௴** { **ஸஞ்சிகை 2**

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमोभगवते पुरुषाय तस्मै ॥

यत्त्रैलोक्यमहीयसोऽपि महितं सम्मोहनं मोहनात्
कान्तं कान्तिनिधानतोऽपि मधुरं माधुर्यधुर्यादपि ।
सौन्दर्योत्तरतोऽपि सुन्दरतरं त्वद्रूपमाश्चर्यतोऽ-
प्याश्चर्यं भुवने न कस्य कुतुकं पुष्णाति विष्णो विभो ॥

பகவன் ! (விஷ்ணுஸ்வரூபின்!) இவ்வுலகில் யாரிடத்தில்தான் உன்னுடைய (மஹிமை பொருந்திய) (திரு) உருவம் உத்ஸாஹத்தை வ்ருத்திசெய்யாது. இவ்வுருவம், மூவுலகிலும் உயர்ந்த (மேம்பட்ட) வைகளைக்காட்டிலும் உயர்ந்ததும் (மேம்பட்டது) கவர்ச்சிகரமான வஸ்துக்களைக்காட்டிலும் கவர்ச்சிகரமானதும், ப்ரகாசமான வஸ்துக்களின் (சோபை) இருப்பிடத்தைக்காட்டிலும் ப்ரகாசமானதும், மிகவும் இனிமையானவைகளைக்காட்டிலும் இனிமையானதும், உயர்ந்த விருப்பத்தக்கவைகளிலும் விரும்பக்கூடியதும். மிகவும் ஆச்சர்யமானதைக்காட்டிலும் ஆச்சர்யமானதாகவும் (இருக்கிறது.)

ஸ்ரீரங்நாராயணன் ஆச்ரிதர்களைக்காப்பாற்ற பர, வ்யூஹ, விபவ, அர்ச்சா, அந்தர்யாமி என்று பல உருவங்களில் ஸேவை ஸாதிக்கிறான். இவ்வுருவங்களில் அர்ச்சா ரூபங்கள் ப்ரத்யக்ஷமாய் நம் போன்ற பக்தர்களை ஆகர்ஷிக்கின்றன. இப்படியே பகவத் ஸௌந்தர்யத்திலீடுபட்ட ஓர் பக்தரின் பக்திப்ரவாஹம் தான் இதன் தலைப்பில் காணப்படும் ச்லோகம்.

இவ்வுலகில் ஆழ்வாராசார்யர்கள் தங்களுடைய யோகமஹிமையினால் ஸ்ரிய: பதியை ஸாக்ஷாத்கரித்தார்கள். அந்த ப்ரேமாதிக்யத்தினால் பல அற்புதபாடல்களை இயற்றி நம் போன்றவர்களுக்கும் உபசரித்துள்ளார்கள்.

நம் போன்ற ஸாமான்ய பக்தர்கள் பகவத்பக்தியில்ஈடுபடுவதற்கு உபகாரமாயுள்ளவைகளில் மிகவும் முக்யமானவைகள் நம் நாட்டில் பலவிடங்களிலும் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரிய: பதியின் அர்ச்சாவதாரங்களே.

'शैली दारुमयी लौही लेप्यालेख्या च सैकती ।
मनोमयी मणिमयी प्रतिमाष्टविधाः स्मृताः ॥'

என்று அர்ச்சாவதாரங்கள் பல விதங்களில் காணப்படுகின்றன. அதாவது - ஶைலீ — பகவத்ரூபங்கள் மிகவும் அழகான திருமேனியுடன் கற்களில் செதுக்கப்பட்டு ஆலயங்களில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டவை.

தாருமயீ — உயர்ந்த மரங்களினால் அழகிய சித்ர வேலைப்பாடுகளுடன் பகவத் ரூபங்கள் செய்யப்பட்டு திருக்கோயில்களில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இத்திருமேனிகளுக்கு திருமஞ்ஜனாதிகள் கிடையாது. லௌஹீ — தங்கம், வெள்ளி, பித்தளை முதலிய உலோக வகைகளினால் பகவத்ரூபங்களைப் பல விதங்களில் மிகவும் ஆச்சர்யமான திருவுருவங்களில் வார்த்து ஆலயங்களில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. லேப்யா — (உயர்ந்த மண், கோபி' என்று சொல்லப்பட்ட) மண், ஸுதா (சுண்ணாம்பு) முதலியவைகளினால் திருவுருவங்கள் செய்யப்பட்டு சில ஆலயங்களில் ஸேவை ஸாதிக்கின்றன. உயர்ந்த வாஸனைத் தைலங்களினால் பூசப்பட்டு இவ்வுருவங்கள் காப்பாற்றப்படுகின்றன. இவ்வுருவங்களுக்கும் திருமஞ்ஜநங்கள்கிடையாது. லேக்யா — சிற்சில ஆலயங்களில்சித்ரரூபங்களில் பகவான் ஸேவை ஸாதிப்பதைப் பார்த்து ஆநந்திக்கிறோம்.

சித்ரங்களை ப்ரதிஷ்டை செய்து ஆராதிப்பதும் ஶாஸ்த்ர விஹிதமே. (உதாரணமாக பூலோகவைகுண்டமெனப்படும் ஸ்ரீரங்கத்தில் கோயிலின் உட்புறத்தில் ஸ்ரீநிவாஸனின் சித்ரரூபமான உருவம் வெகுவாக பூஜிக்கப்பட்டு வருவதை நாம் இன்றுகூடக் காண்கிறோம்.) ஸைகதீ– மணலினால் செய்யப்பட்ட உருவம். (உதாரணமாக ஸேதுஸ்நாநம் செய்யும் காலங்களில் ஸ்ரீராமபிரானின் திருவாயுதங்களில் முக்யமானதாகிய தநுஸ் எழுதப்பட்டு அர்ச்சிக்கப்படுகிறது. மனோமயீ – இவ்விதத்தில் ஸாக்ஷாத் திருவுருவமே இல்லை. பக்தர்கள் மானஸிகமாய் பகவத் ஸ்வரூபத்தை த்யாநித்து பூஜைகள் செய்வதே. மணிமயீ – உயர்ந்த இரத்தினங்களால் செய்யப்பட்ட திருவுருவங்கள். சிற்சில கோயில்களில் இம்மாதிரியும் ஸேவை ஸாதிக்கிறான் ஶ்ரிய:பதி. நாம் ப்ரதி தினமும் நம் திருவாராதனத்திற்காக உபயோகப்படுத்தும் ‘ஸாளக்ராமங்களை’ இவ்வகுப்பில் சேர்க்கவேண்டும். நவரத்னங்களிலடங்கிய முத்து, பவழம் முதலியவைகளைப் போல் ஸாளக்ராமங்களும் இரத்தின விசேஷங்களே.

இவ்விதம் பல (உருவங்களில்) அர்ச்சாவதாரங்களில் பகவான் ஸேவை ஸாதிக்கிறான். பகவத்ரூபங்களில் ஈடுபட்டு ஆநந்தாநுபவம் செய்தவர்கள் கோடிக்கணக்கானவர்கள். புராதன காலங்களில் ரிஷீச்வரர்களும் யோகிகளும் பகவத்ரூபங்களை ஸாக்ஷாத்கரித்து நமக்கு அறிவித்திருக்கிறார்கள். ராம, க்ருஷ்ணாதி விபவாவதாரகாலங்களில் பகவத்ஸௌந்தர்யத்தை நேரில் அநுபவித்தவர்கள் அக்காலத்தில் வாழ்ந்த பாக்யசாலிகளிற் பலர்.

‘ராமே ஜத்ருஹிராமேண வஷா தஸ்ய ஹொதிகம் | நாமேயம் ஶ்ரீஸ்வர்க்கு ஜமக வ்யமே ஜைஜம் ॥’

என்று காளிதாஸன் கூறியதுபோல ஸாமான்யர்களும், யோகிகளும் ஸ்ரீராமபிரானுடைய திருமேனி ஸௌந்தர்யத்திலீடுபட்டவர்களே. தசரதசக்ரவர்த்தியினிடமயோத்யாவாஸிகள்

‘ஜ்யேஷ்டோ ஹி ஸுவாஹு ஸ்ரீமாந் ஸ்ரீமஹாவயம் | ஶ்ஜோ ஸஹதாயாஞ்ஞம் ராஜம் ஸத்ராவ்ரதாநநம் ॥’

என்று கூறினார்கள் என்றால் ஸ்ரீ ராமபிரான் யுவராஜனாகவேண்டும் என்பதுமட்டிலுமல்ல. ஓர் தாய் தன் குழந்தைக்கு ஸ்நானம் செய்வித்து ஆடையாபரணங்களை அணிவித்து ஸந்தோஷிப்பது போல் அக்காலத்தவர் கஜாரூடராகவும் சத்ர சாமராதிகளுடன் அலங்கரித்த ஆஸனாரூடராகவும் ஸ்ரீ ராமபிரானை ஸேவிக்க ஆசைப்பட்டார்கள் என்பதும் மிகையாகாது.

‘ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்’ என்றும் ஸ்ரீராமபிரானை மிக அழகாக வால்மீகி வர்ணித்துள்ளார்.

க்ருஷ்ணாவதாரத்தில் அவருடைய ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டவர்கள் கோடிக்கணக்கானவர்கள். அவதாரகாலத்திலேயே சதுர்புஜனாகவும், உயர்ந்த ஆடையாபரணங்களுடனும் ஸேவை ஸாதித்தான் க்ருஷ்ணன். பிறகு ‘ஸாக்ஷாந்மந்மதமந்மத:’ என்றபடி மன்மதனுக்கும் மன்மதனாகவே ஸேவை ஸாதித்தனன் யோகிகளுடைய மனத்திற்கும். இம்மாதிரி விபவாவதாரங்களில் ஸேவை ஸாதிப்பது இயற்கையான போதிலும், அர்ச்சாவதாரங்களிலும் இவ்விதம் அழகாகவே ஸேவை ஸாதிப்பதை நாம் கண்டு களிப்புறுகிறோம்.

ஆழ்வார்களும் யோகஶக்தியால் பகவானை ஸாக்ஷாத்கரித்தபோதிலும் அர்ச்சா ஸௌந்தர்யங்களில் ஈடுபட்டவர்கள் அதிகம். ‘பச்சை மாமலைபோல்மேனி’ என்று ஆரம்பித்த ஆழ்வார் ஸ்வர்க்கத்தையும் வெறுத்து அர்ச்சாநுபவத்தில் மூழ்கிக்கிடந்தார்.

‘படியாய்க் கிடந்து உன் பவளவாய்க் காண்பேனே’ என்று ஆழ்வாரும் அசேதநரூபத்துடனாவது ஶ்ரிய:பதியின் ரூபலாவண்யத்தை அநுபவிக்க ஆசைப்பட்டார்.

நம் பூர்வாசார்யர்களும் அர்ச்சாவதாரமஹிமை பொருந்திய க்ஷேத்ரங்களில் வஸிக்கவும்

‘வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:’ என்று வைகுண்ட வாஸத்தைக்காட்டிலும் அர்ச்சாவதாரப்பெருமைபொருந்திய க்ஷேத்ர வாஸங்களை உயர்ந்தவைகள் எனக்கருதினார்கள். நம் பாரத பூமியில் பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களும், அவைகளில் ஆச்சர்யமான திருமேனிகளுடனும், அழகிய பாவங்களுடன் எப்பெருமான் ஸேவை ஸாதிக்கிறான். அத்துடன் நிற்காமல் பற்பல உத்ஸவாதிகளையும் ஏற்படுத்தி இன்னும் அழகானபடி எம்பெருமான் நமக்கு ஸேவை ஸாதிக்கும்படி உயர்ந்த ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள் என்பதும் நம் பாக்ய விசேஷமே. திருக்கோயில்கள் உள்ள ஸ்தலங்களில் யாவரும் பகவத் தர்சனம் செய்ய உத்ஸவாதிகள் நடப்பது உயர்ந்த ஏற்பாடே. நம் முன்னோர்கள் அத்துடன் நில்லாமல் புராதனமான க்ஷேத்ரங்களிலிருந்து உத்ஸவமூர்த்திகளை தூர தேசங்களுக்கும் சில உத்ஸவ காலங்களில் எழுந்தருளச் செய்தார்கள் என்றால் நம்மிடம் பக்தியை வளர்க்கவும் அர்ச்சாவதார ரூபங்களை நாம் கண்டு களிக்கவும் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள் என்பது நன்கு புலப்படும். நம்மாழ்வார் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளுவது புராதன வழக்கம் என்று நாம் கேள்விப்படுகிறோம். அஹோபில... அழகமாகிரி பெருமாள் கோவிலிலிருந்து வாதனும் தெற்கே உள்ள உடையார்பாளையமென்ற ஊருக்கு எழுந்தருளுவது வழக்கம் என்று கேள்விப்படுவதும் இதற்காகவே காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே செல்லும் சாலையோரங்களில் தொடர்ச்சியாக பல மண்டபங்கள் காணப்படுவதையும் நாம் மறுக்க முடியாது. ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து கிள்ளைக்கு பெருமாள் எழுந்தருளுவதும் திருக்கோயிலூரிலிருந்து திருப்பாப்புலியூர் வழியாக ஸமுத்திரக் கரைக்கு தேஹளீசன் எழுந்தருளுவதும் ஸ்ரீரங்கநாதன் ஜீயபுரத்திற்கு எழுந்தருளுவதும் நம் காலத்திய நிகழ்சிகளே. இவைகளாவது குறிப்பிட்டயிடங்களில் காணப்படும் பகவதநுகூலங்கள். எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது நம் ஸ்ரீ சிங்கப்பிரான் (ஸ்ரீ அழகியசிங்கர்) கண்ணன் முதலிய ரூபலாவண்யமுள்ள அர்ச்சாவதாரங்களுடனும் ஆழ்வாராசார்ய ரூபங்களுடனும் நம் தேசத்திலுள்ள கிராமங்கள் தோறும் அக்ரஹாரம் தோறும் ஒவ்வொரு பக்த க்ருஹம் தோறும் எழுந்தருளி நமக்கு ஸேவை ஸாதிக்கிறான் என்றால் நமக்கு இதைக் காட்டிலும் உயர்ந்த பாக்ய விசேஷம் இருக்க முடியுமா.

* * * * * * *

ஸ்ரீமதஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶட-கோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய

ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்

திருநக்ஷத்ரமஹோத்ஸவம் இவ்வருஷம் ஸ்ரீமதஹோபிலமட ஸஞ்சாரத்தில் கோயம்பத்தூரில் பத்துதினங்கள்வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. 24-1-1954 ஞாயிறுதினம் உதித்த உத்ஸவம் திருநக்ஷத்ரதினமாகிய 2-2-1954 (தைமீ 20வ உத்திராடநன்னாளில் பூர்த்தியடைந்தது.) பத்து தினங்களிலும் வேத-ப்ரபந்த, புராண_க்ரந்த பாராயணங்களும் வெகு நேர்த்தியாக நடந்தன. பல பண்டிதர்களும், கனபாடிகளும், அத்யாபகர்களும், வைதிகர்களும், ஆஸ்திகர்களும் ஷஷ்டி கைங்கர்யத்தில் பங்கெடுத்துக்கொண்டார்கள். திருநக்ஷத்ரவிஷயபூதரான நம் ஸ்ரீமதழகியசிங்கரால் பதிமூன்றுவருஷங்களுக்கு முன் உபக்ரமிக்கப்பட்ட “ஸ்ரீ மாலோல வித்வத்ஸதஸ்” ஸும் இந்த பத்துதினங்களிலும் அத்யாச்சர்யமாக நடைபெற்றது. பல தூரதேசங்களிலிருந்து வேதலக்ஷணங்களில் தேர்ச்சிபெற்ற ப்ரஸித்த கனபாடிகளும், ஸ்ரீபகவத்ராமாநுஜ தர்சனத்தில் வாக்யார்த்தங்கள் சொல்லக்கூடிய ப்ரஸித்த பண்டிதர்களும், வேதாங்கங்களாகிய ஶாஸ்த்ரங்களை நன்கு அப்யஸித்த பண்டிதர்களும் இந்த ஸதஸ்ஸில் அந்வயித்தார்கள். தத்காலம் ஸ்ரீமதஹோபிலமடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவீரராகவஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மாலோலஸதஸ்ஸின் அத்யக்ஷஸ்தா

னத்தில் வீற்றிருந்து வெகு அழகாகவும் நேர்த்தியான முறையிலும் ஸதஸ்ஸை நடத்தியருளினார். வேதாந்த விஷயங்களில் வாக்யார்த்தங்கள் நடந்தஸமயங்களில் வாத, ப்ரதிவாதங்களைத் தெளிவாக எடுத்துரைத்து, பக்ஷபாதமில்லாமல் விஷயவிசாரம் செய்யும்படி ஏற்பாடு செய்தருளியது மிகவும் நேர்த்தியானது. வேதாந்தகாலக்ஷேபாதிகளில் அந்வயிக்காதவெளகிகர்கள்கூட ஶாஸ்த்ரஸம்பந்தமான இந்த ஸதஸ்ஸில் ஸந்நிஹிதர்களாக இருந்து ஸ்ரீமதழகியசிங்கரின் தெளிவான விளக்கங்களினால் உயர்ந்த கருத்துக்களை அறிந்துகொண்டு ரொம்பவும் க்ருதார்த்தர்களானார்கள். அடிக்கடி இம்மாதிரிஸந்தர்ப்பங்களில் தங்களுக்கு வாய்ப்பு ஏற்படவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தார்கள். மைஸூர் போன்ற தூரதேசங்களிலிருந்தும், தென்நாடுகளிலிருந்தும் பல வித்வான்கள் ஸதஸ்ஸில் அநேகமாகஎல்லாநாட்களிலும் அந்வயித்தார்கள். திருநக்ஷத்ரதினத்தன்று வெகு விமர்சையாக வேத, ப்ரபந்த, க்ரந்த சாற்றுமுறை நடந்தது. பல நூற்றுக்கணக்கில் பக்தர்கள் கூடியிருந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸேவித்தும், ஸ்ரீமதழகியசிங்கரை தெ-ண்டன் ஸமர்ப்பித்தும், ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ப்ரஸாதத்துடன் ஆசார்யஸ்ரீபாததீர்த்தத்தையும் பெற்று பாக்யவான்களானார்கள். அன்று யதாகாலத்தில் நேர்த்தியான ததீயாராதனமும் நடந்தது. அதில் ஆயிரக்கணக்கானவர்கள் (ஸ்த்ரீகள் குழந்தைகளுட்பட) அன்வயித்தார்கள்.

திருநக்ஷத்ரமஹோத்ஸவத்தில் இவ்வருஷம் குறிப்பிடத்தகுந்தது சிலவை. ஒவ்வொருதினமும் நியதமான மணிப்படி பாராயணங்கள், மங்களார்த்தி, ஸதஸ் கூடுதல், ததீயாராதநம் முதலியவைகள் நடந்தன. ஒவ்வொருநாளும் இரண்டுவேளைகள் (காலையிலும் மத்யாந்ஹவேளையிலும்) ஸதஸ்கூடி அதில் பல பண்டிதர்கள் விஷயவிசாரங்களைச் செய்தார்கள். ஸதஸ்ஸுக்காக வந்த பண்டிதர்கள் அநேகமாக எல்லோருமே ஶாஸ்த்ரவிசாரங்களிலீடுபட்டு தங்களாலியன்றவளவு ஸதஸ்ஸை விமர்சையாக்கினார்கள். திருநக்ஷத்ரதினத்தில் சாற்றுமுறைமுடிந்தவுடன் ஸ்ரீமதழகியசிங்கர் பண்டிதர்களுக்கு ஸம்பாவனைகளையும், மார்க்கவ்யயங்களையும், அனுக்ரஹித்தருளினார். ஏற்கனவே ஸதஸ் ஸம்பந்தமாய் வெளியிடப்பட்ட அறிக்கையில் கண்டபடி பல வெளியூர் பண்டிதர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அஸௌகர்யங்களையும், அதனால் நேரில் அந்வயிக்கமுடியாமையையும் குறித்து ஸ்ரீஸந்நிதிக்கு விஜ்ஞாபனபத்ரிகைகளை அனுப்பியிருந்தார்கள். அவைகளைக் கடாக்ஷித்து ஸ்ரீமதழகியசிங்கர் யதோசிதம் ஸம்பாவனைகளை அவர்களுக்கும் அனுக்ரஹித்தருளினார். ஸ்ரீ மாலோலவித்வத்ஸதஸ்ஸை ஆரம்பித்தநம் (42-வது பட்டம்) ஸ்ரீமதழகியசிங்கரின் திருவுள்ளத்திற்கு உவப்ப இந்த ஸதஸ் வெகு நேர்த்தியானமுறையில் நடந்தேறியது. ஸ்ரீமதழகியசிங்கரின் முதல் வர்ஷாராதனத்துக்குள்வந்த முதல் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் இதுவே. இந்த உத்ஸவமும் முதல்தரமாகவே நடந்தேறியது நம் பாக்யவிசேஷமே.

* * * * * * *

திருவள்ளூரில் ஸ்ரீஅழகியசிங்கரின் ப்ருந்தாவநத்தில் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

பலவர்ஷங்கள் திருவள்ளூரிலேயே ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்ததும், முடிவில் ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ருந்தாவநமும் அவ்வூரிலேயேஏற்பட்டதும் நம்மெல்லோருக்கும் நன்கு தெரியும். ஸ்ரீ அழகியசிங்கரின்ப்ருந்தாவனத்திலும் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் வெகுவெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. பலசிஷ்யர்கள் உத்ஸாஹாதிசயத்தால் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தைப் பத்துதினங்கள் வெகு அழகாக நடத்தினார்கள். இதுபற்றிய முழுவிவரமும் வேறொரு வ்யாஸத்தில் காணப்படுகிறது.

* * * *

ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரம்

கோயம்பத்தூரில் ஸ்ரீமதழகியசிங்கர் பல நாட்களாக எழுந்தருளியிருந்தார். 42-வது பட்டம் நம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திற்காகவும், மாலோல வித்வத்ஸதஸ்ஸுக்காக

வும் ஒரேஊரில் எழுந்தருளியிருப்பதாகத்திருவுள்ளம்பற்றியாயிற்று. இங்கிருந்து ஸ்ரீ அழகியசிங்கர் சிங்காநல்லூர், பாலக்காடு முதலிய இடங்களுக்கு எழுந்தருளி பிறகு அங்கிருந்து பூர்வாசார்யர்கள், ஆழ்வார்கள் இவர்களுக்கெல்லாம் உகந்ததும் அவர்களால் மங்களாஶாஸநம் செய்யப்பட்டதுமான மலைநாட்டுத்திருப்பதிகளை மங்களாஶாஸனம் செய்வதாகத் திருவுள்ளம்பற்றியாயிருக்கிறது. திருவாங்கூர்–கொச்சி ராஜ்யத்திலேயே சிலநாட்கள் ஸஞ்சாரம் செய்து திருவனந்தபுரம் முதலியவிடங்கள் சென்று பிறகு ஆழ்வாரவதரித்த திருநகரிக்கு எழுந்தருளுவதாக தத்காலம் ஸ்ரீ திருவுள்ளம்.

திருவள்ளூரில் நம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீமதஹோபிலமடத்தில் (43-வதுபட்டத்தில்) ஸ்ரீ வீரராகவஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனாக அவதரித்தருளினார். அங்கிருந்து முதல் ஸஞ்சாரமாக நம் ப்ரதமாசார்யனான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் அவதாரஸ்தலமாகிய ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்திற்கு எழுந்தருளியாயிற்று. இதுதான் முதல்ஸஞ்சாரம். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் மங்களாஶாஸனம் ஆனவுடன் நம் ஸ்ரீ ஸன்னிதியின் ப்ரதமாசார்யனும் (ப்ரவர்த்தகருமான) ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருவவதாரஸ்தலமாகிய திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளியாயிற்று. இதுதான் இரண்டாவது ஸஞ்சாரம். அதுமுடிவடைந்ததும் மூன்றாவது ஸஞ்சாரம் தொடங்கிற்று. 'ஸ்ரீவண்ஶடகோபன்' என்று நம் ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு அஸாதாரணமான திருநாமம் உண்டு. அதற்குக் காரணமாவது:— ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் தெற்கே தாம்ப்ரபர்ணீ தீரத்தில் நம் ஸ்ரீவைஷ்ணவ 'தர்சநஸ்தாபகரான' நம்மாழ்வாருக்குச் செய்த கைங்கர்யமும் அதனால் கிடைத்த 'ஸ்ரீ வண் ஶட கோப' பிருதும். இதற்கு உவப்பத்தான் ஸ்ரீமதழகியசிங்கர் ஆழ்வார் திருநகரியை யுத்தேசித்துத்தன் மூன்றாவதுஸஞ்சாரத்தை ஆரம்பித்திருப்பது. இப்படியே நம் ஸ்ரீமதழகியசிங்கர் பல்லாண்டுபல்லாண்டு எழுந்தருளியிருந்து ஸஞ்சாரங்களைச் செய்துகொண்டு, கோடிக்கணக்கான சிஷ்யர்களுக்கு ஸேவைஸாதித்துக்கொண்டும், அநுக்ரஹித்துக்கொண்டும் எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அனுக்ரஹித்தருளவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறோம்.

*　　*　　*　　*　　*

'पुराणमित्येव न साधुसर्वं' என்று கவிசக்ரவர்த்தியான காளிதாஸன் கூறியுள்ளதை நாம் நன்கு கவனித்துப் பார்க்கவேண்டும். எக்காலத்திலும் புரா
புராதன பழக்க, தன பழக்க,
வழக்கங்கள் வழக்கங்களிலும்,
கொள்கைகளிலும்
பலருக்கு நம்பிக்கை உண்டு. அவைகளில் ஒருவித மாறுபாடும் செய்யக்கூடாதென்று சொல்பவர் பலர். காலாநுகுணமாக சில மாறுபாடுகளைச் செய்யலாம் என்று சொல்பவர் சிலர். காலத்திற்கனுகுணமாக எல்லாவற்றையும் மாற்றிக்கொள்ளவேண்டும் என்று சொல்பவர் சிலர். இவ்விதப் பாகுபாடுகளில் நம் பழக்கவழக்கங்களில் மாறுபாடுகள் அவச்யமா? அப்படியாயின் எவ்வளவு அளவு மாறுபாடுகள் அவச்யம்? அவைகளினால் நம்முடைய கொள்கைகளின் அடிப்படைத்தத்வங்கள் சிதைவுபடாமலிருக்குமா? என்று யோசித்துப்பார்த்தல் வேண்டும். மாறுபாடுகள் உலக வளர்ச்சிக்குறிகுறி என்று கூறும் நவீனகாலத்தவர் கூறுவதுபோல் மனம் போனபோக்கில் மாறுபாடுகளைச் செய்துகொண்டுபோனால் நாம் ப்ராசீன உயர்ந்த ஸம்ப்ரதாயங்களையும், அவைகளின் நன்மைகளையும் இழப்போமென்பதில் ஸந்தேஹமில்லை.

உலகில் முற்போக்குடன் செல்வதாகவும், மாறுபாடுகளையும், புதுப்புது கொள்கைகளையும் ஆதரிப்பதாகவும் கூறப்படும் மேனாட்டவர்கள்கூட ப்ராசீன ஸம்ப்ரதாயங்களையும், பழக்கவழக்கங்களையும் முக்கியமாகக் கடைபிடிப்பவர்கள் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது. உதாரணமாக அரசன் சிங்காதனம் ஏறுங்காலத்தில் அவர்கள் அணிந்துகொள்ளவேண்டிய ஆடையாபரணங்கள், அக்காலத்தில் செய்யவேண்டியகார்யக்ரமங்கள்முதலியன மாறுபடாமலேயே காப்பாற்றப்படுகின்றன. உயர்ந்த நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகளின் ஆடையலங்காரங்கள், கார்யக்ரமங்கள்,

இவைகளும் புராதனப்பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டவைகளே. இதுமாதிரி நூற்றுக்கணக்காக பழக்கங்களையும் சகுனங்களையும் அடிப்படையாகக் கொண்டுதான் எங் நாட்டினரும் தங்களுடைய கார்யங்களையும் பழக்கங்களையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க நம்நாட்டில்மாத்திரம் ஆழ்ந்த யோசனையில்லாத சிலர் நம்முடைய பழைய பழக்கவழக்கங்கள் ஒழிக்கப்படவேண்டுமென்று கூறிக்கொண்டு, அவைகளுக்குச்சான்றாக உலகமுற்போக்குக்கு உதாரணம் மேனாடுகள் என்றும் கூறிக்கொண்டேயிருப்பதும் மிகவும் வியப்பாகவேயிருக்கிறது. அறிவுடையவன் ஒவ்வொருவனும் தான் செய்யும் கார்யங்களைக்குறித்து இவ்விதம் யோசிக்கவேண்டும். அதாவது இதை நாம் ஏன் செய்யவேண்டும்; இதனால் நாம் என்ன கார்யத்தை ஸாதிக்கிறோம் என்று நன்கு யோசித்து பிறகே அக் கார்யத்தை ஆரம்பிக்கவேண்டும். புராதன பழக்கவழக்கங்களை மாற்றுவது என்பதே நம் நோக்கம் என்று நாம் எண்ணுவது மிகவும் பிழை. உலகப்போக்கில் நம்மிஷ்டம் இல்லாமலேயே சில மாறுபாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன. இவைகளை நாம் தடுக்கமுயன்றும் முடியவில்லை. அப்படியிருக்க அனாவச்யமான அனாசாரவழிகளைப் பின்பற்றி நாம் தீய பழக்கவழக்கங்களை மேற்கொள்ளாமலிருப்பதுதான் முன்னேறும் ஸமூஹத்தின் அடையாளம்.

'ஆத்மதத்வவிவேகத்தில்' முன்னேறியவர்கள் இந்தியர்கள் என்று மேனாட்டவர்கள் கூறுவதைநாம் புத்தகங்களின்மூலமாகவும் செய்தித்தாள்கள்மூலமாகவும் படிக்கிறோம். அப்படியிருந்தும் நம்முடைய ஸித்தாந்தங்களையும் பழக்கவழக்கங்களையும் கௌரவமாகப் பேசும் அவர்களே இவைகளைப் பின்பற்றுகிறார்களா? இல்லை. ஏன்? தங்களுடைய தேசத்திலும் பழக்கவழக்கங்களிலும் உள்ள பற்று இதரவிஷயங்களில் ஈடுபடுவதைத் தடை செய்கிறது. அப்படியிருக்க நாம்மாத்திரம் ஏன் நம் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ளுகிறோம். இது நம்முடைய அறிவின்மையைக்குறிக்குமல்லவா? புராதன பழக்கவழக்கங்களைத் தூஷிப்பதுபோலத்தோன்றும் காளிதாசனின் வாக்யத்தையும் நன்றாகப் படிக்கவேண்டும். தன் முன்னோர்களின் க்ரந்தங்களைப்பற்றி (நாடகங்களை) அவன் அப்படிக் கூறியிருப்பினும், புராதன வழக்கங்களைக் கூறுவதுபோலும் கருத்தைக் கொடுக்கிறது. ஆனால் அவன் கூறுவது இதுதான். புராதனக்கருத்துக்கள் உயர்ந்தவைகள்தான். ஆனால் (ஸர்வ) எல்லாம் அப்படியல்ல என்பதால் புராதனக்கருத்துக்களில் உயர்ந்தவைகள் பல என்பதும் புலனாகும். இதனாலேயே நம் ப்ராசீன ஸம்ப்ரதாயங்களில் ஆதரவு உடையவர்களாக இருக்கவேண்டுமென்பதை நாம் முக்யமாய் அறிந்துகொள்ளவேண்டியதாகிறது.

நன்கொடைகள்

1. நமது கலாசாலாபிவ்ருத்தியில் மிகவும் உத்ஸாஹம் கொண்ட முக்யமான ஸ்வாமிகளில் ஒருவரான ஸ்ரீ, உப, பாராஞ்சி, கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி சிறிது காலத்திற்கு முன்பு, நமது கலாசாலை புத்தகசாலைக்கென்று ஒரு உயர்ந்த பெரிய கண்ணாடி பீரோவை கொடுத்திருக்கிறார். அந்த ஸ்வாமி நம் கலாசாலைக்குச் செய்துள்ள பல கைங்கர்யமும் சாச்வதமாகவே இருக்கக் கூடியவை. இந்த பீரோவில் சுமார் 1000 புஸ்தகங்கள் வைக்கமுடியும். இந்த ஸ்வாமிக்கு அடியேன் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

2. திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் கார்யதர்சியும் நம் கலாசாலாபிவ்ருத்தியில் மிகவும் ஆர்வமும் உள்ள பந்தல்குடி, வித்வான், ஸ்ரீ. உப. P. R. திருமலை அய்யங்கார் ஸ்வாமி ஷைசங்கத்தின் வெளியீடுகளில் தத்காலம் கைவசம் உள்ள 39 வெளியீடுகளை நமது கலாசாலைக்குக் கொடுத்துதவியிருக்கிறார். அந்த ஸ்வாமிக்கு அடியேன் க்ருதஜ்ஞதையைத்தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஈச்சம்பாடி தி. ராமஸ்வாமி,
அத்யக்ஷர்,
ஸ்ரீஅஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை,
மதுராந்தகம்.

ஸ்ரீ:

புத்தக விமர்சனம்

ஸத்ஸங்கம்:— வெங்கடாபுரம், அம்பத்தூர். ஆண்டுவிழாமலர் விஜயஹ ஐப்பசிமீ

ஸத்ஸங்கத்தின் ஆண்டுவிழாமலரை நாம் வரப்பெற்றோம் என்பதை ஸந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அம்பத்தூரில் உயர்ந்த நோக்கத்துடன் ஓர் ஸங்கம் ஏற்பட்டிருப்பதும் நம் ஸமூஹத்திற்கு இம்மாதிரி ஓர் தொண்டு செய்து வருவதும் மிகவும் போற்றத்தக்கதே. இந்த ஆண்டுவிழா மலரில் உயர்ந்த பகவச் சித்ர படங்களும் ஆசார்யர்களுடைய படங்களும் அச்சிடப்பட்டிருப்பது மிகவும் நேர்த்தியாக அமைந்திருக்கின்றன. அமைப்பில் மாத்திரம் அல்ல; பொருளிலும் ஓர் உயர்ந்த ஸஞ்சிகையாகவே இதைக்கருதவேண்டும். உயர்ந்த தமிழாசிரியர்களும் பல அறிவாளிகளும் இதில் வ்யாஸங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆங்கில வ்யாஸங்களும் இதில் சேர்க்கப்பட்டிருப்பது மிகவும் ஓர் நேர்த்தியான கருத்து. ஆங்கில வ்யாஸங்களில் ஸ்ரீ ஆண்டாளைப்பற்றிய வ்யாஸம் நேர்த்தியாக இருக்கிறது என்று சொல்லத்தேவையில்லை. ஏனெனில் அதை எழுதிய ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி (சென்னை அட்வொகேட்) ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை நன்கு அறிந்தவரும் அநுபவித்தவருமாதலால் தன் அநுபவங்களை நமக்கு அப்படியே எடுத்துக் கூறியிருக்கிறார்.

மற்றொரு வ்யாஸம் "The Episode of Anasuya". இதை எழுதியவர் ஸ்ரீ. உப. N. A. ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி. (சென்னை அட்வொகேட்) இந்த வ்யாஸம் ஸ்ரீமத்ராமாயணத்தின் ரஹஸ்யத்தை மிகவும் அழகாக சில அம்சங்களில் எடுத்துக்கூறியிருக்கிறார். இக்காலத்து ஸ்த்ரீகள் அறிந்துகொள்ளவேண்டிய உயர்ந்த குணங்கள் ஸீதையினிடம் காணப்பட்டன என்று தெளிவுற இந்த ஸ்வாமி விளக்கியிருக்கிறார். இடையிடையே பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளும் கலந்திருக்கின்றன. இந்த வ்யாஸமானது இந்த ஸ்வாமியின் ஆழ்ந்த குணங்களையும் அறிவையும் நமக்குப் புலப்படுத்துகிறது. நமக்குத்தெரியாத பலவிடங்களில் மறைந்த பொக்கிஷங்கள் இருப்பது போல் இந்த ஸ்வாமி இதுவரை தன் அநுபவங்களை நம் போன்றவர்களுக்கு எடுத்துக் கூறாமல் இருந்திருக்கிறார். இனி மேன்மேலும் அந்த ஸ்வாமி தன் அநுபவங்களையும் ஆழ்ந்த கருத்துக்களையும் அடிக்கடி நமக்கு எடுத்துக் கூறி ஸமூஹமுன்னேற்றத்திற்கு உதவி புரிவார் என்று எண்ணுகிறோம். இப்புத்தகத்தில் இன்னும் பந்தல்குடி பாரத்வாஜ தமிழ்வித்வான் ஸ்ரீ. உப. ரெ, திருமலை அய்யங்கார் ஸ்வாமியின் வழக்கமான ஓர் உயர்ந்த வ்யாஸமும் இடம் பெற்றிருப்பது மிகவும் ஸந்தோஷமாயிருக்கிறது.

அடிக்கடி இம்மாதிரி உயர்ந்த மலர்கள் வெளிவந்தால் நம் ஸமூஹத்திற்கு ஒரு பெரிய உபகாரமாகும்.

ஸம்பாதகர்

ஸ்ரீ:

திருப்பாவைக்கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

அந்த சப்தத்தைக் கேட்டு அப் பெண்ணின் தாயார் பின்கட்டிலிருந்து அவ்விடம் வந்து 'யார், என்ன' வென்றுவிசாரித்தாள். நாயகப் பெண் ஸமாசாரத்தைச் சொன்னாள். சொல்லிவிட்டு 'மாமி! உன் பெண்ணை நீ எழுப்பக்கூடாதா?' என்று வினயமாகக்கேட்டாள். அவளும் வாயால் பல சொல்லிக் கூப்பிட்டும் கதவைத் தட்டியும்பார்த்தாள். பயனில்லை. அவளைச் சேர்ந்த சில ஸ்த்ரீகளும் அங்கு வந்திருந்தனர். அவர்களையும் 'மாமி' என்று மரியாதையாய் அழைத்துத் தூங்கும் பெண்ணை எழுப்ப முடியுமா என்று முயன்று பார்க்கும்படி கேட்டுக்கொண்டாள். அவர்கள் முயற்சியும் பலிக்கவில்லை. இன்னதுசெய்வதென்றுதோன்றவில்லை. அந்த ஸங்கடமான நிலையில் வெறுமனே இருக்க முடியாதாகையால் அப் பெண்ணின் தாயாரைப்பார்த்துச் சில வார்த்தைகள் சொன்னாள். 'வெகுநேரம் பலபேர் பலபடியாக எழுப்பியிருக்கின்றபடியால் உன் மகள் அவச்யம் விழித்துக்கொண்டிருக்கவேண்டும். ஆயினும் ஒன்றும் பேசவில்லை. அதனாலவள் ஊமையோ வென்று நினைக்கவேண்டியிருக்கின்றது அப்படித்தானா? வாய் பேசாவிட்டாலும் எழுந்து வந்து கதவைத் திறக்கலாமே. அப்படித் திறவாமையால் நாம் எழுப்பும் சப்தமொன்றும் அவள் காதில் படவேயில்லையென்று சொல்லவேண்டும். அப்படிச்செவிடா அவள்? இவ்வித ஊனம் இதுவரையில் அவளுக்கிருந்ததில்லையென்பாயாகில் தூங்கி விழித்துக்கொண்டிருந்துமறுபடியும் தூங்கும் ஸ்வபாவமுள்ளவளா இவள்? அதுவுமில்லையென்றால் அசைவே அற்றிருக்கும்படியோ எழாது தூங்கிக்கொண்டேயிருக்கும்படியோ யாராவது மந்திரம் போட்டுவிட்டார்களா?' என்றிவ்வாறு பல விகல்பங்களை யெடுத்துரைத்தாள். இக்கேள்விகள் தூங்கும் பெண்ணின் மாதாவினிடத்திலிருந்து ஒருபதிலை எதிர்பார்த்துக்கேட்கப்பட்டவையல்ல. அவளும் ஒரு பதில் கூறவில்லை. அந்தஸமயத்தில் வாயை மூடிக்கொண்டிருக்கமுடியாமல் இப்படியெல்லாம் பேசினாள் அந்த ப்ரதான கோபகுமாரி. வாய் இப்படிப் பேசிக்கொண்டிருந்தாலும் மனஸ்ஸு உள்ளே வேலைசெய்துகொண்டேயிருந்தது. இப்பொழுது செய்யவேண்டியது என்ன? எந்த உபாயம் செய்தால் இவள் எழுந்திருப்பாள்? என்று ஆழ்ந்து சிந்தனை செய்தது. பரமைகாந்தினியாகையால் எந்த ஸங்கடம் நேர்ந்தாலும் எம்பெருமானைத் தவிர வேறு யாரையும் நினைக்க முடியாது. அவனுடைய க்ருபையைத்தான் இப்போது நாடவேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. இப்போது அதை எப்படிப் பெறுவது? பெரியோர்கள் நாமஸங்கீர்த்தநம் பண்ணும் ஸமயமாதலால் அதுவே அப்போது அநுஷ்டிக்கவேண்டிய உபாயமென்பது தோன்றிற்று.

'रोगार्तो मुच्यते रोगाद्बद्धो मुच्येत बन्धनात्।
भयान्मुच्येत भीतस्तु मुच्येतापन्न आपदः॥

என்றதெல்லாம் நினைவுக்கு வந்தது. ஆகவே அப்பெண் எழுந்திருக்கும்வரையில் ஸஹஸ்ரநாமத்தில் அடங்கிய நாமங்களைக் கீர்த்தநம் பண்ணுவது என்று தீர்மானித்துத் தோழிகளுடன் 'மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று நாமம் பலவும் நவின்'றாள்.

'अतीन्द्रियो महामायो महोत्साहो महाबलः'
'वेद्यो वैद्यस्सदायोगी वीरहा माधवो मधुः'
'वैकुण्ठः पुरुषः प्राणः प्राणदः प्रणवः पृथुः'

என்று இந்த நாமங்கள் ஸஹஸ்ரநாமத்தில் படிக்கப்பட்டிருப்பது ப்ரஸித்தம். 'ஸர்வசக்தனாய் அத்யாச்சர்ய வ்யாபாரங்களுடையவன்' என்பதையும், 'கருணைமூர்த்தியான பிராட்டியோடு கூடினவன்' என்பதையும், 'தனக்கொரு ஈச்வரனில்லாத ஸர்வேச்வரன்' என்பதையும் இந்த நாமங்கள் குறிக்கின்றன. தன்னை அடைந்தவர்களுடைய எண்ணங்களைப் பூர்த்தி செய்வதற்கு அநுகூலமான பகவத்குணங்கள் இவை. ஆகையால் இவற்றைக் குறிக்கும் பல நாமங்களை ஸங்கீர்த்தநம் செய்தார்கள். 'நாமமாயிரமேத்தநின்ற நம்பீ நீயே சரணம்' என்றார்கள். எம்பெருமான் க்ருபை பண்ணினான். அப்பெண் புரண்டாள். கை கால்கள் அசைந்தன. மெள்ள எழுந்தாள். கண்ணை விழித்துப்பார்த்தாள். அறைக்கு வெளியே செய்யப்படும் பகவந்நாமஸங்கீர்த்தநம் காதில் பட்

டது. உடனே மிகுந்த பரபரப்போடு கட்டிலிலிருந்து குதித்து ஓடிவந்து கதவைத் திறந்து 'அறியாமல் எல்லோரையும்காக்க வைத்து விட்டேனே. க்ஷமிக்கவேணும்' என்று வேண்டிக்கொள்ளும் பாவனையில் தோழிகளைப் பார்த்தாள். 'நல்லவேளை; பகவானுடைய க்ருபையினால் இப்போதாவது விழித்து எழுந்திருந்தாயே; வா போவோம்' என்று சொல்லி மேல் ஒன்றும் பேசாமல் அவளை யழைத்துக்கொண்டுவந்து கோஷ்டியில் சேர்த்துக் கந்யகைகள் எல்லோரும் அவ்விடத்திலிருந்து புறப்பட்டார்கள்.

10. நோற்றுச்சுவர்க்கம்

இன்னும் எழுந்திருந்து வராத மற்றொரு பெண்ணின் வீடு வந்ததும் எல்லோரும் அதன் எதிரில் நின்றார்கள். நாயகப்பெண் அவ்வீட்டினருகே சென்று கூப்பிட்டாள். எத்தனை தடவை கூப்பிட்டும் பயனொன்றுமில்லை. அவ்வீட்டுப் பெண் எழுந்து வரவே யில்லை. 'பெண்ணே, நீ நோன்பு நோற்று ஸ்ரீவைகுண்டம் போவது வெகு அழகாக இருக்கிறது' என்று சிறிது வருத்தமும் பரிஹாஸமும் கலந்த ரீதியில் சொல்லிவிட்டு வாசற்கதவைக் கையால் தட்டி 'யார் வீட்டிலிருப்பது. சற்று எழுந்து வந்து கதவைத் திறவுங்கள்' என்று கூவினாள். இது பல தடவை நடந்தது. தாளிட்டகதவை ஒருவரும் வந்து திறக்கவில்லை. 'கதவைத் தான் திறக்கவில்லை. உள்ளே இருந்தபடியே மறுமொழி ஏதாவது கொடுக்கக்கூடாதா' என்றாள். ஸ்ரீக்ருஷ்ணன் வார்த்தையில் நம்பிக்கையிராமையால் இப்படி மிகவும் உதாஸீநமாயிருக்கின்றார்களோ என்று எண்ணி மறுபடியும் 'எம்பெருமானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை உள்ளபடி அறிந்தவர்கள் இப்படி ஸந்தேஹப்படுவது தகுமோ? நாம் போய் ஸேவித்தால் உடனே நாம் கேட்பதையெல்லாம் கொடுத்தருள்வனே. நாம் உடனே போகாமல் இப்படிக்காலம் கடத்துகின்றோமே, அவன் நம்மை எதிர்பார்த்துக்காத்துக்கொண்டன்றோ இருப்பான்' என்றாள். வெளியிலிருந்து இவள் என்ன சொல்லித்தான் என்ன பயன்? மற்றொரு முறையும் நாமஸங்கீர்த்தநம்செய்து பகவானைச் சரணம் புகவேண்டியதுதான், வேறு வழியில்லை' யென்று தோன்றிற்று. ஸஹஸ்ர நாமபாராயணம் அப்பொழுதுதான் செய்யப்பட்டு முடிந்ததாகையால் மறுபடியும் அதை முழுவதும் பாராயணம் செய்யப்போதில்லை யென்பதை உணர்ந்து

'आर्ता विषण्णाश्शिथिलाश्च भीता
घोरेषु च व्याधिषु वर्तमानाः।
संकीर्त्य नारायणशब्दमात्रं
विमुक्तदुःखास्सुखिनो भवन्ति॥'

என்று கொண்டாடப்பட்டமஹாப்ரபாவத்தையுடைய நாராயண நாமத்தைக் கீர்த்தநம் செய்வதென்று நிச்சயித்துத் தோழிகளுடன் அப்படியே செய்தாள். திருத்துழாயின் மாஹாத்ம்யத்தைச் சொல்லுமிடத்தில்

'तुळस्याः पल्लवं विष्णोः शिरस्यारोपितं कलौ।
आरोपयति सर्वाणि श्रेयांसि नरमस्तके॥'

எனப்பட்டிருக்கிறது. திருத்துழாயை எம்பெருமானுடைய திருமுடியில் ஸமர்ப்பித்தால் எல்லா நன்மைகளுமுண்டாமென்பது இதன் கருத்து. இதை அறிந்திருந்த அப்பெண் அப்போது இந்த உபசாரத்தை எம்பெருமானுக்கு மாநஸமாகவே பண்ணி 'உடனே இவ்வீட்டிலுள்ளோரும் இவர்களுடைய பெண்ணும் பெருந்தூக்கத்தை விட்டு எழுந்திருக்கும்படி க்ருபை செய்யவேண்டும்' என்று வேண்டினாள். அந்த க்ஷணமே படீரென்று வாசற்கதவு திறந்தது. பூனை குதித்துப் பாத்திரங்கள் உருண்டு அந்தப் பெருங் கல கல ஶப்தத்தினால் விழித்தெழுந்த பெரியோர்கள், வாசலில் பெண்கள் செய்யும் நாமஸங்கீர்த்தந த்வநியைக் கேட்டு அதே க்ஷணத்தில் ஓடோடிவந்து வெகு அவஸரமாகத் தாழ்ப்பாளை நீக்கி வாசற்கதவைத் திறந்து 'குழந்தைகாள் உள்ளே வாருங்கள். இதோ பெண்ணை எழுப்புகின்றோம். நீங்கள் வந்து வெகு நாழிகை ஆகிவிட்டதோ? ஐயோ பாவம். எத்தனை நாழிகை காத்துக்கொண்டிருந்தீர்களோ. பாழாய்ப்போன தூக்கம் உடம்பு தெரியாமலிருந்துவிட்டோம்' என்று அன்பும் ஆதரவும் ததும்பப் பேசினார்கள். இதனால் மிகவும் மகிழ்வுற்ற ப்ரதானகோபகுமாரியும் மற்றப் பெண்களும் நாம் அபேக்ஷிக்கும் நல்லதைத் தருவது புண்ணியமெனப்படுகின்றதாகையாலே இப்போது நாம் வேண்டியதைத் தந்தருளின எம்பெருமானேபுண்ணியனென்று அவன் அப்போது செய்தருளிய மஹோபகாரத்தை நினைத்து க்ருதஜ்ஞர்களாய் அவ்வீட்டுப் பெண் படுத்துத் தூங்கும் படுக்கையறையின் அருகே சென்று அவளை யெழுப்பினார்கள். இப்பெண்ணும் இதற்கு முன் எழுப்பப்பட்ட பெண்ணைப்போல் தனது தோழிகளை

வரவேற்று உபசரிப்பதற்காக நீண்டகாலம் விழித்துக் காத்திருந்து சற்று முன்னேதான் படுத்தவளாதலால் அயர்ந்து தூங்கிவிட்டாள். வீட்டிலுள்ளவர்கள், வந்தவர்கள் எல்லோருமாகச் செய்த பெரும் ஆரவாரத்தினுல் இப்போது அவளுடைய பெருந்தூக்கம் சிறிது கலைய ஆரம்பித்தது. அந்த ஸமயத்தில் ப்ரதான கோபகுமாரி ஜன்னல் வழியாக அவளைப் பார்த்து இவ்வாறு பேசினுள். 'அடி ஸகியே, உன்னுடைய தூக்கம் மிகப் பெரிது. இதுமாதிரி உலகில் நாம் எங்குங்கண்டதில்லை. எவருக்கும் இத்தகைய நித்ரை இருக்கமுடியாது. தூக்கத்தில் பெயர் போனவன் ஒருவனைக் கேட்டிருக்கின்றோம். அவன்தான் கும்பகரணன். உலகத்தில் எங்குங்கண்டிராத உன் தூக்கத்தைப் பார்க்கும்போது ஒன்று தோன்றுகிறது. ஒரு விஷயத்தில் ப்ரஸித்தி பெற்ற ஒருவன் அவ்விஷயத்தில் மற்ருெருவர் தனக்கு ஸமமாக இருப்பதை ஸஹிக்கமாட்டான். ஆகையால் அந்தக் கும்பகரணன் உன் தூக்கத்தைக் கேட்டு ஸஹிக்காமல் உன்னோடு போட்டியிட்டிருப்பான் என்பது நிச்சயம். அதில் அவன் தோற்றுப்போயிருப்பான் என்பதும் அப்படியே. ஆனுல் இதற்கு மேலும் ஒன்று உண்டு. அதாவது;-- போட்டியில் தோற்றவர்கள் தமக்குள்ளதை வெற்றிபெற்றவர்களுக்குக் கொடுத்துவிடுவது என்கிற நியமம் ஒன்று உண்டு. அதன்படி அவன் உன்னிடம்தோற்றதுமாத்திரமன்றி தனது பெருந்துயிலையும் உனக்குத்தந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் எங்கும் கண்டும் கேட்டுமிராத இவ்வளவு தூக்கம் உனக்கு இருக்க நியாயமில்லை. அப்படித்தானு சொல்லு பார்ப்போம், இனி, 'கும்பகரணன் எப்போது இருந்தவன், நான் எப்போது இருக்கின்றேன், எனக்கும் அவனுக்கும் என்ன ஸம்பந்தம்? பலசதுர்யுகங்களுக்குமுன் ஸ்ரீராமனுடைய பாணத்திற்கு இரையானவனன்றே அவன். ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் பேசுகின்றுயே' என்பாயாகில், அப்படியன்று. சொல்லுகிறேன் கேள். பண்டொருகால் ஸ்ரீராமனென்கிற யமனுடைய வாயில் விழுந்தவனுனும் அந்தக் கும்பகரணன் அழியாத ஆவி உருவத்தில் இப்போதுமிருக்கின்றுனுகையால் நீ எங்குங்காணு பெருந்தூக்கம் தூங்கி தூக்கத்தின்விஷயத்தில் அவனுக்குள்ள ப்ரஸித்தியைக் குலைப்பதைக் கண்டு பொறுக்காமல் மறுபடியும் ஓர் உருவமெடுத்து வந்து போட்டியிட்டுத் தோற்றுத் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு தன் தூக்கத்தையும் உனக்குக் கொடுத்துவிட்டுப்போனுனென்று ஊஹிக்கவேண்டியதாயிருக்கின்றது. அது உண்மைதானு? சொல்''

இப்படி இவள் இடைவிடாது உரக்கப் பேசினது சிறிது சிறிதாகக் காதில் விழுந்து அப்பெண்ணை விழிக்கும்படி செய்தது. மெள்ள எழுந்து உட்கார்ந்தாள். வெளியிலுள்ளவர்கள் மேல்மேலும் கூப்பிட, அப்பொழுதுள்ள நிலையை அவள் உணர்ந்தாள். கட்டிலிலிருந்து கால்களைத் தொங்கவிட்டுக் கீழே இறங்கிவந்து கதவைத் திறக்க வெண்ணினுள். ஆனுல் அப்பொழுதும் தூக்கமயக்கம் முற்றிலும் தெளியவில்லையாகையால் இறங்கும்போதும் நடக்கும்போதும் தடுமாறினுள். இதைக்கண்டதோழிகள் 'அம்மா! நீ மிகுந்த தூக்கமுடையவள். **'किमिव हि मधुराणां मण्डनं नाकृतीनां'** என்கிறபடி நீ தடுமாறுவதும் வெகு அழகாகத்தான் இருக்கின்றது. ஆனுலும் தடுமாருதே. ஸுதாரித்துக்கொள். பிறகு வந்து கதவைத்திற' என்ருர்கள். அவள் அப்படியே செய்து வெளியில் வந்து எல்லோருடனும் கலந்துகொண்டாள்.

11. கற்றுக்கறவை

எழுப்ப வேண்டிய மற்ருெரு பெண்ணின் வீடு வந்தது. இதன் அமைப்பு ஒருவிதமானது. மதில்போன்ற உயர்ந்த சுவரும் அதன் நடுவில் வாசற்படியுமே முன்பக்கத்தில் இருந்தன. வாசம் செய்யும் வீடு அச் சுவருக்கு வெகு தூரத்திற்கு அப்பாலிருந்தது. முன் வாசற்கதவு தாளிடப்பட்டிருந்தமையால் நாயகப்பெண் அதனருகில் சென்று தட்டி ஓசைப்படுத்தினுள். கதவு திறக்கப்பட்டது. திறந்தவள் ஒரு வேலைக்காரி. உட்புறத்தில் சுவரை ஒட்டி வாசற்படியின் அருகில் கட்டப்பட்டிருந்த ஒரு சிறு வீட்டில் விழித்துக்கொண்டே படுத்திருந்தாள் அவள். கதவைத் தட்டின ஓசை உண்டான உடனே எழுந்து வந்து கதவைத் திறந்தாள். பெண்கள் எல்லோரும் வந்திருப்பதைக் கண்டு 'எதற்காக அம்மா வந்திருக்கின்றீர்கள்? எதற்காகக் கதவை இடித்தீர்கள்?' என்று கேட்டாள். பெண்கள் தாமநுஷ்டிக்கும் நோன்பைப் பற்றிச் சொல்லிவிட்டு 'அதற்காக இவ்வீட்டுப்பெண்ணை அழைத்துப் போவதற்கு வந்திருக்கிறோம்' என்ருர்கள். 'அப்படியா? நல்லது. போய் எழுப்பி அழை

த்து வாருங்கள்' என்றாள் அவள். பிறகு நாயகப்பெண் 'வீட்டில் இன்னும் யார் இருக்கின்றார்கள்? பெரியோர்கள் எவராவது இருக்கின்றனரா? இடித்தால் கதவைத் திறப்பார்களா? அது சிறுபெண்ணாகையால் விழித்து எழுந்து வராமலிருக்கக்கூடும்' என்று கேட்டாள்.

வேலைக்காரி— அப்பெண் தவிர வீட்டில் யாருமே இல்லை.

நாயகப்பெண்— வீட்டில் வசிப்பவர்கள் யார்? எத்தனைபேர்? அவர்கள் இப்போது எங்கே போயிருக்கின்றனர்?

வேலைக்காரி- பெண்ணின் தகப்பனார் தாயார் அண்ணன்மார் பலர் இவர்கள் இங்கு வசிப்பவர்கள். இவர்கள் இவ்வூரில் பெருங்குடிகள். நிறைந்த செல்வமும் செல்வாக்குமுள்ளவர்கள். மேல்மேலும் பொங்குகின்ற இவ்வூரின் ஐஶ்வர்யத்தைக் கண்டு பொறாமை கொண்ட பகைவர் சிலர் இவ்வூரைத்தாக்கிக் கொள்ளையிட்டுப் பசுக்களாகிற செல்வத்தையெல்லாம் அபஹரித்துக்கொண்டுபோகும் நோக்கத்துடன் சதியாலோசனை செய்து அதை நிறைவேற்ற ஸமயம் பார்த்துக்கொண்டிருந்தனர். மஹாபுத்திசாலியான நந்தகோபர் இதைக் கண்டுபிடித்து அப்பகைவர்கள் இங்குவந்து தீங்கிழைப்பதற்குமுன் அவர்களுடைய ஊருக்குப்போய் அங்கேயே அவர்களை அடக்கக் கருதி, யுத்தம்செய்வதில் பயிற்சிபெற்று மஹாவீரர்களாய் விளங்கும் இவ்வூர் புருஷர்களையெல்லாம் திரட்டி பெரும்சேனையாக்கி அனுப்பியிருக்கின்றார். இவ்வீட்டுப் புருஷர் ஒரு பெரிய வீரரானபடியால் இவரையே ஸேனாபதியாக்கிப் போகும்படி கட்டளையிட்டார், அதை ஏற்று இவர் போயிருக்கின்றார். அவர் புதல்வர்களும் அவருடன்போயிருக்கின்றனர். அவருடைய மனைவி ஒரு பந்துவின் வீட்டுக்குச் சென்றிருக்கிறாள். ஆகையால் பெண் ஒருத்தியே இருக்கின்றாள்.

இப்படி அந்த வேலைக்காரி சொன்னதைக் கேட்ட நாயகப்பெண் 'அப்படியா நல்லது. நாங்களே போய் எழுப்பி அழைத்து வருகிறோம்' என்று சொல்லிவிட்டுப் பலதோழிகளுடன் வாசற்படியைக்கடந்து உள்ளே வந்தாள். அங்கிருந்து உள்ளேயிருக்கும் கட்டடத்திற்குப்போகும் விசாலமான வழியின் இரண்டு பக்கங்களிலும் நாட்டப்பெற்ற கம்பங்களின் மேல் எரிந்துகொண்டிருந்த தீபங்களின் ஒளியால் எங்கும் ஒரே வெளிச்சமாக இருந்தது. அதனால் அங்கு இருந்ததெல்லாம் ஸ்பஷ்டமாகக் கண்ணுக்குப் புலப்பட்டது. வழிக்கு இரண்டு பக்கங்களிலும் அகன்று நீண்டு உயர்ந்த பல பல பெருங்கொட்டாய்கள் இருந்தன. அவற்றில் ஒரு பக்கத்திலுள்ளவைகளில் ஒவ்வொன்றிலும் யானைபோன்ற பல பெரும்பசுக்கள் கட்டப்பட்டிருந்தன. மற்றொரு பக்கத்திலுள்ளவைகளில் ஒவ்வொன்றிலும் கொழுத்த பல பல கன்றுகளிருந்தன. இரு பக்கங்களிலும் கண்ணுக்கெட்டினவரையில் கன்றுகளும் பசுக்களும் தோன்றி கண்களைக் குளிரச்செய்து மனஸ்ஸுக்குப் பேரானந்தத்தை விளைவித்தன. 'ஆஹா, இவர்களிடத்தில் திவ்ய தம்பதிகளின் திவ்யகடாக்ஷம் எவ்வளவு விழுந்திருக்கின்றது' என்று வியந்துகொண்டே நாயகப்பெண் தோழிகளுடன் கட்டடத்திற்குச் சென்று படிகளால் முன் தாழ்வாரத்தில் ஏறினாள். அதன் ஒருபக்கத்தில் படுக்கையறை. நான்குபக்கங்களிலும் தீபங்கள் எரிந்துகொண்டிருந்தமையால் அது மிகப்ரகாசமாயிருந்தது. அதில் ஸர்வவித அலங்காரங்களும் செய்யப்பட்டுப்பரிசுத்தமான மெத்தைத்தலையணைகளுடன் கூடிய கட்டிலொன்று கண்ணைக் கவரும்படியான அத்புத தோற்றத்துடன் விளங்கிற்று. இவ்வீட்டுப்பெண்ணும் தன் தோழிகளின் வரவை எதிர்பார்த்து வெகு நேரம் விழித்திருந்து விளக்குகள் ஏற்றி அறையையலங்கரித்துவிட்டு கட்டிலினருகேபோய் நின்றபடியே மெத்தையின்மேல் தலையை ஒரு பக்கமாக வைத்து அதைச்சுற்றி இரண்டு கைகளையும் மடக்கிவைத்துக்கொண்டு சாய்ந்தாள். அவ்வளவுதான் அவளுக்குத் தெரியும். அடுத்த க்ஷணம் இவ்வுலகத்தையே மறந்தாள். அவ்வளவு பெருந் தூக்கம். அந்த நிலையில் தோழிகள் அங்கு வந்து சேர்ந்தனர். ஜன்னலின் வழியாக அவளைப் பார்த்தார்கள். அப்போது அவர்கள் அங்குக் கண்ட அத்புதக் காட்சி அவர்களைப் பரவசர்களாகச் செய்தது. அவளுடைய ஏராளமான செல்வம், அதற்குத் தகுந்த அழகு, அதற்குத்தக்க அலங்காரம் எல்லாம் அவர்களுக்குப் பெரும் வியப்பை உண்டாக்கின. அவ்வீட்டுப்புருஷர்கள் தமது நாட்டின் ஸம்பத்தைக் காப்பதற்காக யுத்தத்திற்குப்போய் வீரச்செயல்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதைக் கேட்க அவர்களுக்கு அப்பெண்ணிடத்திலுள்ள கௌரவம் பன்மடங்கு அதிகமாயிற்று.

(தொடரும்)

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

அபீதிஸ்தவம்

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

अभीतिरिह यज्जुषां यदवधीरितानां भयं भयाभयविधायिनो जगति यन्निदेशे स्थिताः ।
तदेतदतिलङ्घितद्रुहिणशम्भुशक्रादिकं रमासखमधीमहे किमपि रङ्गधुर्यं महः ॥ १

அபீதிரிஹ யஜ்ஜுஷாம் யதவதீரிதாநாம் பயம்
பயாபயவிதாயிநோ ஜகதி யந்நிதேஶே ஸ்திதா: ।
ததேதததிலங்கிதத்ருஹிணஶம்புஶக்ராதிகம்
ரமாஸகமதீமஹே கிமபி ரங்கதுர்யம் மஹ: ॥ (1)

(பதவுரை) இஹ– இந்த ஸம்ஸாரமண்டலத்தில், யஜ்ஜுஷாம்– எந்த பகவானை ஆச்ரயித்தவர்களுக்கு, அபீதி:– பயமில்லாமை, (இருக்கிறதோ) யதவதீரிதாநாம்– எந்த பகவானால் திரஸ்கரிக்கப்பட்டவர்களுக்கு, பயம் – பயமும், (இருக்கிறதோ) ஜகதி – உலகத்தில், பயாபயவிதாயிந: – பயத்தையும் அபயத்தையும் செய்கிறவர்கள், யந்நிதேஶே – எந்த பகவானுடைய கட்டளையில், ஸ்திதா:– இருக்கிறார்களோ, தத் – அப்படிப்பட்ட, (அப்படி வேதாந்தங்களில் ப்ரஸித்தமாயும் என்றபடி.) ஏதத் – இந்த (அர்ச்சாவதாரரூபமாய் ஸுலபமாயுமுள்ள என்றபடி.) அதிலங்கித – மீறப்பட்ட, த்ருஹிணஶம்புஶக்ராதிகம் – பிரஹ்மா, ருத்திரன், இந்திரன் முதலியவர்களை உடையதாயும், ரமாஸகம் – லக்ஷ்மியோடு கூடியதுமான, கிமபி– ஒரு, (வர்ணிக்கமுடியாத ஸ்வரூபஸ்வபாவங்களை உடையதான) ரங்கதுர்யம்- ஸ்ரீரங்கநாதனாகிற, மஹ:– தேஜஸ்ஸை, அதீமஹே– அநுஸந்திக்கிறோம்.

(கரு) திருவேங்கடமுடையானுடைய திருமணியின் அம்சமாய் தூப்புலில் அவதரித்து நம் விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை நிலைநிறுத்தின ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன், முன் ஒரு காலத்தில் ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேசங்களுக்கு துருஷ்கர் முதலியவர்களால் ஏற்பட்ட பயம் நீங்குவதற்காக, இந்த "அபீதிஸ்தவம்" என்கிற ஸ்தோத்ரத்தினால் ஸ்ரீரங்கநாதனை ப்ரார்த்தித்து பயம் நீங்கும்படி செய்தார். ஆகையினால் இப்பொழுதும் பயகாலங்களில் பெரியோர்கள் இந்த ஸ்தவத்தை அநுஸந்திப்பது வழக்கம். இதில் முதல் இரண்டு ச்லோகங்களால் மங்களத்தைச் செய்கிறார்.

பகவானிடம் எல்லையற்ற ப்ரீதிரூபமான பக்தியை வைத்து அவனுடைய கைங்கர்யரூபமாக நித்யநைமித்திகாதிகர்மங்களை அநுஷ்டிப்பவர்கள் அவனுடைய க்ருபைக்குப் பாத்திரர்களாகி ஸம்ஸாரபயத்தினின்றும் விடுபட்டு முக்தியையடைகிறார்கள். பகவானையாச்ரயிக்காமலும், அவனுடைய ஆஜ்ஞாரூபமான ச்ருதிஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டிக்காமலுமிருப்பவர்களுக்கு ஸம்ஸாரபயமும் நரகபயமும் ஏற்படுகிறது. உலகத்தில் பயத்தையும் அபயத்தையும் கொடுக்கக்கூடியவர்களென்று ப்ரஸித்திபெற்ற அரசன், இந்திரன், யமன், அக்நி முதலியவர்களும் பகவானுடைய கட்டளைக்குப் பணிந்து நடப்பவர்களே தவிர ஸ்வதந்த்ரமாக எதையும் செய்ய சக்தி உள்ளவர்களல்ல என்று இவ்வர்த்தத்தை "अथ सोऽभयङ्गतो भवति। यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते । अथ तस्य भयं भवति" "भीषास्माद्वातः पवते। ... ... मृत्युर्धावति पञ्चम इति" என்கிற ச்ருதிகள் கூறுகின்றன. இப்படி ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளுக்கும் மேற்பட்ட ப்ரபாவத்தை உடையதாயிருந்தும் நம் போன்றவர்களுக்கு ஸுலபமாகும்படி அர்ச்சாரூபமாய் வந்தவதரித்து இருக்கிறதாயும், பெரிய பிராட்டியாரோடு கூடினதுமான ஸ்ரீரங்கநாதனுகிற தேஜஸ்ஸை ஸ்தோத்ரம்செய்கிறோம்.

दयाशिशिरिताशया मनसि मे सदा जागृयुः श्रियाऽध्युषितवक्षसः श्रितमरुद्वृधासैकताः ।
जगद्दुरितघस्मरा जलधिडिम्भडम्भस्पृशः सकृत्प्रणतरक्षणप्रथितसंविदस्संविदः ॥ २

தயாசிசிரிதாஶயா மநஸி மே ஸதா ஜாக்ருயுஃ
ஸ்ரியாத்யுஷிதவக்ஷஸஃ ஸ்ரிதமருத்வ்ருதாஸைகதாஃ ।
ஜகத்துரிதகஸ்மரா ஜலதிடிம்படம்பஸ்ப்ருஶஃ
ஸக்ருத்ப்ரணதரக்ஷணப்ரதிதஸம்விதஸ்ஸம்விதஃ ॥ (2)

(ப—ரை) தயா— தயையினால், சிசிரித—குளிர்ந்த, ஆசயா:-மனத்தை உடையவைகளாயும், ச்ரியா— மஹாலக்ஷ்மியால், அத்யுஷித— வாஸம் செய்யப்பட்ட, வக்ஷஸ:- திருமார்பையுடையவைகளாயும், ச்ரித— அடையப்பட்ட, மருத்வ்ருதா— காவேரியினுடைய, ஸைகதா:- மணலை உடையவைகளாயும், ஜகத்- உலகத்தின், துரித— பாபங்களை, கஸ்மரா:— சாப்பிடுபவைகளாயும், (போக்கடிப்பவைகளாயும்) ஜலதிடிம்ப— ஸமுத்திரத்தின் சிசுவினுடைய, டம்பஸ்ப்ருஶ:- காந்தியையுடையவைகளாயும், ஸக்ருத்ப்ரணத— ஒருதரம் ப்ரபத்திசெய்தவர்களுடைய, ரக்ஷண— பாதுகாப்பதில், ப்ரதித— ப்ரஸித்தமான, ஸம்வித:- ப்ரதிஜ்ஞையையுடையவைகளாயுமிருக்கிற, ஸம்வித:- ஜ்ஞாநங்கள், (ஜ்ஞாநஸ்வரூபனான பகவான் என்றபடி.) மே- என்னுடைய, மனஸி— மனஸ்ஸில், ஸதா— எப்பொழுதும், ஜாக்ருயு:— ப்ரகாசிக்கட்டும்.

(கரு) தயையினால் குளிர்ந்த திருவுள்ளம் உள்ளவராயும், ஸ்ரீ மஹாலக்ஷ்மியால் நித்யவாஸம் செய்யப்பட்ட வக்ஷஸ்ஸ்தலத்துடன் கூடினவராயும், காவேரியின் மத்யபாகத்தை அடைந்து தன்னை ஆச்ரயித்தவர்களின் பாபங்களைப் போக்குகிறவராயும், சிறிய ஸமுத்திரம் போன்ற நீலகாந்தியையுடையவராயும், 'सकृदेव प्रपन्नाय ...... अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम' என்கிறபடி ஒரு தடவை ப்ரபத்தி செய்தவர்களை ரக்ஷிப்பதை தீவ்ரவ்ரதமாய்க் கொண்டவரும், ஜ்ஞாநஸ்வரூபனும், ஜ்ஞாநத்தை குணமாக உடையவருமான பகவான், அகிஞ்சனரு

யும் வேறு கதியற்றவனுமான என்னுடைய மனத்தில் எப்பொழுதும் குடிகொண்டு விளங்க வேண்டும்.

यदद्य मितबुद्धिना बहुलमोहभाजा मया गुणग्रथितकायवाङ्मनसवृत्तिवैचित्र्यतः ।
अतर्कितहिताहितक्रमविशेषमारभ्यते तदप्युचितमर्चनं परिगृहाण रङ्गेश्वर! ॥ ३

யதத்ய மிதபுத்திநா பஹுளமோஹபாஜா மயா
குணக்ரதிதகாயவாங்மநஸவ்ருத்திவைசித்ர்யத: ।
அதர்க்கிதஹிதாஹிதக்ரமவிசேஷமாரப்யதே
ததப்யுசிதமர்ச்சனம் பரிக்ருஹாண ரங்கேச்வர! ॥ (3)

(ப—ரை) ஹே ரங்கேச்வர— ஓ ரங்கநாதனே! அத்ய— இப்பொழுது, மிதபுத்திநா— அல்பமான புத்தியையுடையவனும், பஹுளமோஹபாஜா— அதிகமான மோஹத்தை அடைந்தவனுமிருக்கிற, மயா— என்னால், குண— ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களால், க்ரதித— கோர்க்கப்பட்ட, காய— சரீரம், வாங்மநஸ— வாக்கு மனஸ் இவைகளுடைய, வ்ருத்தி— வ்யாபாரத்தின், வைசித்ர்யத: — வைசித்ரியத்தினால், அதர்க்கித — ஊஹிக்கப்படாமலிருக்கிற, ஹித— உபாயம், அஹித—அபாயம், இவைகளுடைய, க்ரமவிசேஷம்— ஸ்வீகரிப்பது பரித்யஜிப்பது என்கிற க்ரமத்தின் விசேஷத்தை உடைத்தாயிருக்கும்படி, (ஹிதாஹிதக்ரமவிசேஷம் - ஸ்தோத்திரம் செய்யப்படுகிற வஸ்துவுக்கு அநுகுணம் தகாதது, ஸ்தோத்திரம் செய்யவேண்டிய க்ரமம் இவைகளை உடைத்தாயிருக்கும்படி) யத்— எந்த ஸ்தோத்திரம், ஆரப்யதே— ஆரம்பிக்கப்படுகிறதோ, ததபி— அதையும், உசிதம்— தகுந்த, அர்ச்சநம்— பூஜையாக, பரிக்ருஹாண— ஸ்வீகரிக்கவேணும்.

(கரு) இந்த ச்லோகத்தில் தன் நைச்யத்தை அநுஸந்தித்துக்கொண்டு தன் ஸ்தோத்திரத்தை அங்கீகரிக்கும்படி ஸ்ரீரங்கநாதனை ப்ரார்த்திக்கிறார்.

ஹே ரங்கேச்வர! இவ்வுலகில் அடியேன் அல்பமான புத்தியையுடையவன். இருக்கும் ஸ்வல்பபுத்தியும் கார்யகரமாயில்லாமையால் அதிக மோஹத்தை அடைந்திருக்கிறேன். என் மனோவாக்காயங்களும் ஸத்வரஜஸ்தமோகுணங்களால் கட்டப்பட்டு நினைக்கக்கூடாதவைகளை நினைப்பதும், சொல்லக்கூடாததைச் சொல்வதும், செய்யக்கூடாததைச் செய்வதுமான விசித்திரவ்யாபாரத்துடன் கூடியவைகளாயிருக்கின்றன. ஆகையினால், நான் ஸ்தோத்திரம் செய்யவேண்டிய உமக்குத் தகுந்தது இன்னது, தகாதது இன்னது, ஸ்தோத்திரம் செய்ய வேண்டிய ப்ரகாரம் இந்த விசேஷங்களை நிச்சயித்துக்கொள்ளாமல் உம்மை ஸ்துதிக்கத் தொடங்கிவிட்டேன். இந்த ஸ்துதியையும் உமக்கு அநுகுணமான வாசிகபூஜையாக தேவரீர் ஸ்வீகரித்தருளவேணும்.

இனி, மேல் ச்லோகத்தால் நிரங்குசமான ஐச்வர்யத்தையுடைய பகவான் விஷயமான ஸ்தோத்திரத்தின் பெருமையை வெளியிடுகிறார்.

मरुत्तरणिपावकत्रिदशनाथकालादयः स्वकृत्यमधिकुर्वते त्वदपराधतो बिभ्यतः ।
महत् किमपि वज्रमुद्यतमिवेति यत् श्रूयते तरत्यनघ तद्भयं य इह तावकस्तावकः ॥ ४

மருத்தரணிபாவகத்ரிதஶநாதகாலாதயஃ
ஸ்வக்ருத்யமதிகுர்வதே த்வதபராததோ பிப்யதஃ ।
மஹத் கிமபி வஜ்ரமுத்யதமிவேதி யத் ச்ரூயதே
தரத்யநக தத்பயம் ய இஹ தாவகஸ்தாவகஃ ॥

(ப-ரை) ஹே அநக- தோஷமற்றவனே, மருத்- வாயு, தரணி- ஸூர்யன், பாவக- அக்நி, த்ரிதசநாத- தேவேந்திரன், காலாதய:- யமன் முதலானவர்கள், த்வதபராதத:- உன் அபராதத்திலிருந்து, பிப்யத:- பயந்தவர்களாய், ஸ்வக்ருத்யம்- தன் கார்யத்தை, அதிகுர்வதே- மிகவும் ஜாக்ரதையுடன் அநுஷ்டிக்கிறார்கள். உத்யதம்- ஓங்கப்பட்ட, வஜ்ரமிவேதி- வஜ்ராயுதம் போல் என்று, (அதாவது ஓங்கப்பட்ட வஜ்ராயுதத்தினிடமிருந்து உண்டானதுபோன்ற,) யத்- யாதொரு, மஹத்- பெரிய, கிமபி- ஒரு, பயம்- பயமானது, ச்ருயதே- ச்ருதியில் ஓதப்படுகிறதோ, தத்- அந்த பயத்தையும், இஹ- இந்த ப்ரக்ருதி மண்டலத்தில், தாவகஸ்தாவக:- உம்மை ஸ்தோத்திரம் செய்கிற, ய:- ஒருவன், தரதி- தாண்டுகிறான்.

(கரு) தோஷம் கிஞ்சித்தேனுமில்லாத ரங்கநாதனே! 'भयादस्याग्निस्तपति भयात्तपति सूर्यः। भयादिन्द्रश्च वायुश्च मृत्युर्धावति पञ्चमः' 'यदिदं किंच जगत्सर्वं प्राण एजति निस्सृतम्। महद्भयं वज्रमुद्यतं य एतद्विदुरमृतास्ते भवन्ति' என்கிற ச்ருதிகளால், வஜ்ராயுதம் ஓங்கினாற்போல், பகவானுடைய ஆஜ்ஞையை மீறினால் என்ன ஆபத்து விளையுமோ என்கிற பெரிய பயத்தினால் வாயு, ஸூர்யன், அக்நி, இந்திரன், யமன் முதலானோரும், வீசுவது, வெளிச்சத்தைக் கொடுப்பது முதலிய தந்தாம் காரியங்களை மிகவும் ஜாக்ரதையுடன் அநுஷ்டிக்கிறார்கள். அப்படிப்பட்ட பயம் உம்மை ஸ்துதிப்பவனுக்குக் கொஞ்சம் கூட கிடையாது.

அடுத்த ச்லோகத்தில் பகவானிடம் மநோவாக்காயங்களாகிற கரணத்ரயத்தில் ஏதாவதொன்றின் ஈடுபாட்டின் ப்ரபாவத்தை அருளிச்செய்கிறார்.

भवन्तमिह यः स्वधीनियतचेतनाचेतनं पनायति नमस्यति स्मरति वक्ति पर्येति वा ।
गुणं कमपि वेत्ति वा तव गुणेश! गोपायितुः कदाचन कुतश्चन क्वचन तस्य न स्याद्भयम् ॥

பவந்தமிஹ யஃ ஸ்வதீநியதசேதநாசேதநம்
பநாயதி நமஸ்யதி ஸ்மரதி வக்தி பர்யேதி வா ।
குணம் கமபி வேத்தி வா தவ குணேஶ! கோபாயிது:
கதாசந குத:சந க்வசந தஸ்ய ந ஸ்யாத் பயம் ॥

(ப-ரை) இஹ- இவ்வுலகில், ய:- எந்த புருஷன், ஸ்வதீ- தன் ஸங்கல்பத்தினால், நியத- நியமிக்கப்பட்ட, சேதந- ஜீவர்களையும், அசேதநம்- அசேதநங்களையும் (அறிவில்லாத வஸ்துக்களையும்) உடைய, பவந்தம்- உம்மை, பநாயதி- ஸ்தோத்திரம் செய்கிறானோ, நமஸ்யதி-

ஸ்ரீ:

ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள்

(12-வது ஸம்புடம் 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்ரீ பாகவதம் தசமஸ்கந்தம் இரண்டாமத்யாயத்தில் பெருமாள் வட மதுரையில் வஸுதேவ தேவகிகளுக்குத் தாம் புத்ரனாய் அவதரிக்க ஸங்கல்பித்தவராய் தமக்கு ஸஹாயம் என்று பேரிட்டுச் சிலரை அநுக்ரஹிக்கத் திருவுள்ளமாய் தன்னுடைய யோக மாயையைப் பார்த்து, 'ஹே மாயே! நீ நந்த கோகுலம் சென்று தேவகியின் வயிற்றிலிருக்கும் நம் திருவனந்தாழ்வானுடைய அம்ஸமான 7-வது கர்ப்பத்தை பெயர்த்து வஸுதேவரின் பார்யையான ரோஹிணியின் வயிற்றில் செல்லும்படி செய்துவிட்டு அங்கிருக்கும் நந்தகோபரின் பார்யை யசோதையின் வயிற்றில் பெண் குழந்தையாகப் பிறக்கக் கடவாய்' என்று கட்டளையிட்டு 'அப்படி நீ செய்தால் உனக்கு பூலோகத்தில் உண்டாகப்போகும் பெருமையைக் கேளாய்' என்று சொல்லும் போது 'உனக்கு கௌரீ, காளீ, பத்ரகாளீ, விஜயை, குமுதை, சண்டிகை என்றிது முதலிய பெயர்கள் வைத்துக் கோயில்கட்டி பூஜிப்பார்கள். அவர்கள் விரும்பும் காம்யமான பலன்கள் யாவத்தையும் நீ அளிப்பாயாக' என்று நியமித்தருளினர்.

நம்நாட்டில் பண்டைகாலந்துடங்கியே இத்தகைய பெயர்களுடன் கோயில்கள் அமைந்து பலர் அந்த தேவதையை வழிபட்டு க்ஷேமத்தைப் பெற்றுவருகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்ததே. இக்கோயில்களில் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவின் மாயை (விஷ்ணுவின் ஸங்கல்பஜ்ஞாநத்தினுடைய அதிஷ்டானதேவதை) என்பது உண்மையாயிருக்க நாளடைவில் இதன் உண்மையை எவ்வாறோ மறந்து இந்த தேவதையையே பரதேவதையென்றும், ஸர்வஜகத்காரணம் என்றும் பலர் எண்ணும்படி புராணங்களும், கதைகளும் ஏற்பட்டுவிட்டன. அப்படிப்பட்ட ப்ரமத்தை நீக்குவதற்கென்றே இங்கு பாகவதபுராணகாரர் 'இது ஸர்வேச்வரனான நாராயணனுக்கு அடங்கிய தேவதை; அவனுக்கு ஏவல் தொழில் செய்ய ஏற்பட்டது. அவனுடைய நியமனத்தாலும், அநுக்ரஹத்தாலும் உலகத்தில் அவரவர்கள் அபேக்ஷிக்கும் பலன்களைக் கொடுத்துக்கொண்டு இருக்கவல்லதாக அமையப்பெற்று விளங்குகின்றது. ஆனதுபற்றி இது பரதேவதையாகமாட்டாது என்றும், மோக்ஷோபாயமாக வழியேயில்லை யென்றும் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

மூன்றாம் அத்யாயத்தில்— 'ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் ஆனதும் வஸுதேவர் குழந்தை பிறந்தவுடன் தகப்பனார் செய்யவேண்டியதான ஸ்நாநம், தானம் முதலியவற்றை தான் அப்பொழுது சிறையிலிருந்தபடியால் க்ரமப்படி செய்யமுடியாதிருந்தும் அவற்றை அப்போது மனத்தால் செய்து முடித்தார்' என்பதால் அவச்யம் செய்யவேண்டிய கார்யங்களை தற்சமயம் பூர்ணமான ரீதியில் செய்ய முடியாவிட்டாலும் அந்த காலம் மிகுந்த புண்யகாலமானபடியால் அக் காலத்தைத் தவிர விடக்கூடாதென்ற காரணத்தால் மனத்தால்செய்ததாகப் பாவித்து பின் ஸௌகர்யம் நேர்ந்தபோது மனத்தால் செய்தவற்றை ப்ரத்யக்ஷமாகச்செய்தாகவேண்டும் என்கிறசாஸ்த்ரார்த்தம் விளக்கிக் காட்டப்பட்டது.

பின் சதுர்புஜங்களுடனும், சங்கசக்ரங்களுடனும் அவதரித்த குழந்தையை பகவான் என்று தெரிந்துகொண்டு இந்த ரூபத்தை மறைத்துக்கொண்டு ஸாதாரண குழந்தையாக இருந்துவிடவேண்டும் என்று வஸுதேவதேவகிகள் வேண்டிக்கொண்டார்கள். அதைக்கேட்டு பகவான் தாம் சங்கசக்ரங்களுடன் அவதரித்து

ஸேவை ஸாதித்ததற்குக் காரணம் கூறும்போது இதற்கு முந்திய மூன்றும் ஜன்மத்தில் நீங்களிருவரும் ப்ரச்னி என்றும் ஸுதபஸ் என்றும் பெயருடன் தம்பதிகளாய் ப்ரஹ்மாவின் நியமனத்தால் ப்ரஜாஸ்ருஷ்டியில் உருப்பட்டு அதற்காக ஐம்புலன்களையுமடக்கி மிகக் கடுமையாக தபஸ் செய்தீர்கள். அப்போது உங்கள் தபஸ்ஸைக்கண்டு ஸந்தோஷித்த நான் உங்களெதிரில் தோன்றி வேண்டிய வரங்களை வேண்டிக்கொள்ளச் சொல்ல நீங்களும் என்னுடைய இந்த ரூபத்தைக் கண்டு மோஹித்துப் போய் இப்படிப்பட்ட குழந்தை எங்களுக்குப் பிறக்கவேண்டுமென வேண்டிக் கொண்டீர்கள். உலகஸுகத்தில் ஈடுபடாத காரணத்தாலும், பிள்ளைப்பேறு பெருமையாலும், என்னுடைய மாயையாலும் அறிவிழந்து என்னிடம் மோக்ஷத்தைக்கேட்கலாமாயிருந்தும் கேட்காமலிருந்து விட்டீர்கள். நானும் அப்பொழுது நீங்கள் வேண்டிய வரத்தை உங்களுக்கு அளித்து விட்டு எனக்கு ஸமானமானவன் யாருமில்லாமையால் நானே உங்களுக்குப் பிள்ளையாகப் பிறந்து ‘ப்ரச்னிகர்ப்பன்’ என்ற பெயருடன் விளங்கினேன். அடுத்த ஜன்மத்தில் அதிதியாயும் கச்யபராயும் பிறந்த உங்களுக்கு மறுபடி நான் பிள்ளையாகப் பிறந்து இந்த்ரனுக்குத் தம்பியானமையால் உபேந்த்ரன் என்றும், குள்ளனுயிருந்தபடியால் வாமனனென்றும் ப்ரஸித்தமாயிருந்தேன். இந்த மூன்றும் ஜன்மத்தில் தேவகீவஸுதேவர்களான உங்களுக்கு அதே ரூபத்துடன் பிள்ளையாகப் பிறந்தேன். எந்த ரூபத்தைக்கண்டு நீங்கள் மோஹித்துப் போய் இத்தகைய பிள்ளையை அருளும்படி வேண்டினீர்களோ அந்த ரூபத்துடன் உங்களுக்கு ஸேவை கொடுத்தது உங்களுக்கு முன் ஜன்மஸ்மரணம் வருவதற்காகவே. இல்லையேல் அந்த நினைவு உங்களுக்கு உண்டாக மாட்டாது. ஆகையால் என்னை நீங்கள் அதிக காலம் பிள்ளை என்கிற ப்ரீதியுடனும், சிலகாலங்களில் ஸர்வேச்வரன் என்ற ப்ரீதியுடனும் உபாஸித்தால் அடுத்தஜன்மத்தில் உங்களுக்கு மோக்ஷம் ஸித்திக்கும்’ என்றும் சொல்லி உடனே ஸாதாரண சிசுவாக மாறிவிட்டார் என்றது கதையின் ரீதி.

இவற்றால் சிற்றின்பங்களையநுபவித்து அலுத்தவர்களுக்குத் தான் அவற்றில் வைராக்யமுண்டாகுமென்றும், இதரவிஷயவைராக்யத்துடன் கூடிய பகவத்பக்தியாலோ ஶரணாகதியாலோ தான் ‘𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾 | 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇’ என்றபடி அவன் மாயையைக் கடக்கமுடியுமென்றும், அதுவும் ‘𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌃’ எவனை பகவான் தானாக வரிக்கின்றானே அவனே பகவானை அடையமுடியுமென்றும், பகவானுக்கு ஸமமானவர் ஒருவரும் இல்லையென்றதால் பகவான் ஒப்புயர்வற்றவன் என்றும் உபநிஷத்துக்களில் சொல்லுகிற ஸூக்ஷ்மார்த்தங்கள் வெளியிடப்பட்டன.

மேல் ‘வஸுதேவர் க்ருஷ்ணனையெடுத்துக் கொண்டு நந்தகோகுலத்திற்குப் புறப்படும்போது பகவன்மாயையின் மஹிமையால் நன்றாகப் பூட்டப்பட்ட கதவுகள் தானே திறந்து கொண்டன. ஜனங்கள் விழித்துக்கொண்டு வெளியில் வராதிருக்கும்படி மேகங்கள் மந்தமான இடிமுழக்கத்துடன் மழைபொழிந்தன. வெள்ளப்பெருக்கெடுத்துச் செல்லும் யமுநா நதியும் இரு பிளவாகப் பிரிக்கப்பட்டதுபோல் அவருக்கு வழிவிட்டது. நந்தகோபரின் மனைவியான யசோதைப்பிராட்டிக்கும் குழந்தைப் பிறந்ததுஎன்பது மட்டில் தெரியுமேயல்லாது அது இன்ன குழந்தை என்பதையும் அவளறியாள்’ என்று கூறுவதால் பகவன்மாயையின் ஶக்தி விசித்ரமானது என்ற ஶாஸ்த்ரதத்வம் வெளியாயிற்று.

ஐந்தாம் அத்யாயத்தில் ‘நந்தகோபர் தமக்குக் குழந்தை பிறந்ததும் ஸ்நாநம் செய்து அலங்கரித்துக்கொண்டு பரிசுத்தராய் ப்ராஹ்மணர்களைவரவழைத்து ஸ்வஸ்திவாசனம்ஜபித்து குழந்தை பிறந்தவுடன் செய்யவேண்டிய ஜாதகர்மம் என்ற ஸம்ஸ்காரத்தைச் செய்து, அதற்கு அங்கமாக நாந்தீச்ராத்தம் முதலியதைச் செய்து, கோதானம் திலதானம் (எள்ளுதானம்) முதலியதை ஶாஸ்த்ரப்படிசெய்து வைத்தார்’ என்று சொல்லும்போது ‘ஜாதெந ஸ்நாநஶுசிர்ஹாஹ்யம் ஸஸ்வஸ்த்யயநெஜ்ய யா | ஶுஷ்ருஷி உாநெஸ்ஷ்டா ஊருவ்யா

ண ூாதூாதவிஶுயா' என்று ஸாதிக்கிருர்.

இதன் அர்த்தம்— ப்ரஸவ, மரண, நிமித்த மாக ஏற்பட்ட ஆஶௌசம் பத்து தினங்கள் சென்ருல் கழிந்து விடுகிறது. இது ஆஶௌ சியின் வீடு முதலிய சொத்துக்களுக்கு ஏற் படும் சுத்தி. தேகத்திற்குப் பொதுவில் ஸ்நாநத்தாலும் ஆசமனத்தாலும் சுத்தி. பிறந்த சிசுவிற்கு ஜாதகர்ம என்கிற ஸம்ஸ்கா ரத்தால். மந்த்ரஜபத்தாலும் திருவாராதனத் தாலும் க்ருஹதேவதை (அர்ச்சாமூர்த்தி) சுத் தமாகிறது. பசு, ஹிரண்ய, தன, தான்ய வடிவமான ஸொத்துக்களுக்கு ஸாமான்யமாக தானத்தால் சுத்தியுண்டாம். மனத்திற்கு சுத்தி ஸந்தோஷத்தாலாகும். பகவத் த்யா னத்தால் ஆத்மா சுத்தமாகிறது.

இங்கு குழந்தைபிறந்தவுடனேயே ஸ்தன்ய பானம் செய்விப்பதற்கு முன்பே செய்யவேண் டியதாக இந்த ஜாதகர்ம என்ற ஸம்ஸ்காரம் ஸூத்ரங்களில் கூறப்பட்டிருக்கிறது. தர்ம ஶாஸ்த்ரங்களிலும் சொல்லப்படுகிறது. அந்த ஸம்ஸ்காரம் பிறந்த குழந்தைக்கு மிகவும் முக்ய மானதெனக் காட்டுவதற்கே மற்ற வஸ்துக்கள் சுத்தமாகும் விதத்தை எடுத்துக்காட்டி அவை களுக்குப்போல் குழந்தைக்கும் ஒரு விலக்ஷண சுத்தியுண்டாகிறதென்கிருர். இங்கு பரமாத் மாவின் உபாஸநத்தால் ஜீவாத்மாவுக்கு சுத்தி யாவது மோக்ஷப்ரதிபந்தகமான ஸர்வபாபங்க ளும் நசிக்கையாகும். இவ்விதமாக மற்ற வஸ் துக்களுக்கும் உண்டாகும் சுத்தி இங்கு குறிப் பிடப்பட்டிருக்கிறது. இதில் ஜாதகர்மத்தால் குழந்தைக்கு ஏற்படும் சுத்தி விலக்ஷணமானது. ரத்னத்திற்கு ஒளி இயற்கையாகவுள்ளதே. ஆனுல் அது சாணை பிடித்த பிறகு வெளியா கிறது. அவ்வாறு இயற்கையாகவுள்ள ப்ரஹ்ம தேஜஸ் முதலியவை ஸம்ஸ்காரங்களால் வெளிப் படுத்தப்பட்டு அவனுக்கு ஒரு வெளிச்சிறப்பு உண்டாகி, அவன் உத்தரோத்தரகர்மங்களில் அதிகாரியாகிருன்.

இவ்வர்த்தத்தை மஹாகவி காளிதாஸன் தன் ரகுவம்ஶகாவ்யத்தில் வெகு அழகாக அமைத்துக் காட்டுகிருன். ரகுவம்ஶம், ஸர்க் கம்-3, ச்லோகம்_18,- 'ஸ ஜாதகர்மண்யகி- லெ தபஸ்விநா தபொவநாதெத்ய புரொ யஸா க்ருதெ । திலீபஸூநுர்மணிராகரொத்பவ: ப்ரயுக்தஸம்ஸ்கார இவாதிகம் பபௌ' என்று. ரகுமஹாராஜன் பிறந்ததும் மஹர்ஷி வஸிஷ்டர் தன் ஆச்ரமத்திலிருந்து எழுந்தருளி ஜாதகர்மத்தைச் செய்தபின், ரத் னத்திற்கு சாணைபிடித்தபின் விசேஷ ப்ரகா சம் உண்டாவதுபோல விசேஷச் சிறப்பு உண் டாயிற்று என்று அதன் பொருள். இப்படி காலந்தவருமல் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங் களைச் செய்தல் அவச்யமானது என்று இவ்வ ளவால் தெளியக் காட்டப்பட்டது.

(53-வது பக்கத்தொடர்ச்சி)

பகராயும் பின்னர் உபாத்யக்ஷராயுமெழுந்தரு ளியிருந்த ஸ்ரீ. உப. முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் பரமபதப்ராப்தியையுத்தேசித்து வருத்தம் தெரிவிப்பதற்காக ஸபை காலை 11 மணிக்கு கூட்டப்பட்டது. அவ்வமயம் கலா சாலை ஸ்ரீ. உப. அத்யக்ஷஸ்வாமியும் மற்ற அத் யாபகஸ்வாமிகளும் அந்த ஸ்வாமியின் குணங் களை எடுத்துரைத்து தங்களுடைய வருத்தத் தைத் தெரிவித்துக்கொண்டார்கள். வித்யா ர்த்திகளும் தங்களுடைய கஷ்டத்தைத் தெரி வித்தனர். அப்பொழுது அவர் ஞாபகார்த்த மாக ஓர் திருவுருவப்படம் வரைவதாகத் தீர் மானம் செய்யப்பட்டது.

பிறகு இக்கூட்டமானது 1—1—54 வெள்ளிக் கிழமை மாலை 3மணிக்கு ஸ்ரீமதஹோபிலமடத் தில் 40 வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங் கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய அவதாரதினமஹோத்ஸவத்திற்காக ந்யாயாத் யாபகரான ஸ்ரீ.உப. வி.டி. ஸம்பத்குமார வர தாசார்ய ஸ்வாமியினுடைய தலைமையில் கூடி ற்று. அப்பொழுது அத்யக்ஷஸ்வாமியும் மற் றவாசார்யஸ்வாமிகளும் ஸ்ரீமதழகியசிங்கரின் கல்யாணகுணங்களைப்பற்றி தெளிவாக எடுத்து உரைத்தனர். பிறகு தங்பவாதம் ஸமர்ப்பிக் கப்பட்டு வேதகோஷபூர்வமாக தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு ஸபை இனிது முடிவுற்றது.

ஸ்ரீ:

செய்திகள்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்ருத பாடசாலை தியாகராயநகர்

8–12–53 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவ ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ர வைபவக்கொண்டாட்டம் தியாகராயநகர் ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத பாடசாலையில் ஸ்ரீ. உப. எஸ். வரதாசாரியர் ஸ்வாமி (மாஜி பெடரல்கோர்ட் ஜட்ஜ்) யின் தலைமையில் ஸ்ரீ. உப. டி. வி. ஸந்தானமய்யங்கார் ஸ்வாமியும் ஸ்ரீ. உப. ஸி. எஸ். சக்ரவர்த்தி அய்யங்கார் ஸ்வாமி முதலிய ஆஸ்திகர்களுடைய முயற்சியினால் ஏற்பாடுசெய்யப்பட்டு ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதபாடசாலை வித்யார்த்திகள் உபாத்தியாயர் ஸ்ரீ. உப. அ. தி. கல்யாணவரதாசார்யஸ்வாமியும் சேர்ந்து தசாவதாரஸ்தோத்ரம், கோதாஸ்துதி, வரதராஜ பஞ்சாஶத் ஸ்தோத்ரங்கள் அநுஸந்தானத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ப்ரபந்தஸ்தோத்திரமும் ஸங்கீதவித்வானால் விமரிசையாய் நடந்தது. அத்யக்ஷர் பேசுகையில், 'சுமார் 50 வருஷங்களுக்கு முன் வைதிக ஆசாரங்கள் கூடிய வரையில் ஸரிவர நடந்து வைதிகர்கள், லௌகிகர்கள் என்ற பிளவு இல்லாமல் இருந்தது. தற்சமயம் ஆசாரங்கள் மலினம் அடைந்து வைதிகர்கள் லௌகிகர்கள் என்ற வித்தியாஸம் ஏற்பட்டுவிட்டது. இது மிகவும் வருந்தத் தக்கது. அந்த வித்தியாஸம் மறைய வேண்டும். இதை உத்தேசித்து ஸ்ரீ அழகிய சிங்கரால் ஸம்ஸ்க்ருதத்துடன் ஆங்கிலம் முதலியபடிப்பை ஸம்பந்தப்படுத்தி புதிய திட்டம் போட்டு பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை ப்ரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டியது நமது முக்கிய கடமையாகும்' என்றும், ஸ்ரீ அழகியசிங்கரின் ஆச்சர்ய சக்திகளையும் எடுத்துரைத்தார்.

பிறகு ஸ்ரீ. உப. கோமல் சேஷாத்ரியாசார் ஸ்வாமியும் ஆசார்யபக்தி ஸ்ரீ அழகியசிங்கரின் குணாதிசயங்கள் பற்றி விவரமாய்ப் பேசினார். ஸ்ரீ. உப. திருக்குடந்தை ஸ்ரீநிவாஸராகவாசார்யஸ்வாமியும் ஸ்ரீ அழகியசிங்கரிடம் தான் குருகுலவாஸம் செய்து அப்யஸித்தவிவரமும் ஆசார்ய குணாதிசயங்களையும் எடுத்துரைத்தார். பிறகு ஸ்ரீ. உப. பந்தல்குடி திருமலை அய்யங்கார் ஸ்வாமியும் ஸ்ரீ அழகியசிங்கரின் மஹிமைகளைப் பற்றி விவரமாய் பேசினார்.

பல பக்தகோடிகள் திருநக்ஷத்ரத்தில் அந்வயித்தார்கள். விளக்குகள் ஒலிபரப்பு ஏற்பாடுகள் செய்திருந்தனர். ஸ்ரீ அழகியசிங்கர் படம், ஸ்ரீ ந்ருஸிம்மன் முதலிய படங்களுக்கு மாலைகள் சாத்தப்பட்டிருந்தன. ஸம்பாவனைகள் வேதகோஷத்துடன் நடந்தது. பிறகு கோஷ்டிக்கு சந்தனதாம்பூலவிநியோகங்கள் நடந்தன. அவ்வமயம் பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ. உப. எஸ். ராமாநுஜஐயங்கார் ஸ்வாமியால் ஸ்ரீ அழகியசிங்கரின் தர்மாநுஷ்டான வைராக்யங்கள் பற்றி பேசப்பட்டது. பக்தகோடிகள் திருநக்ஷத்ரவைபவத்தைப் பேசிக்கொண்டு க்ருதார்த்தர்களானார்கள்.

வில்லிவாக்கம்

வில்லிவாக்கம் தேவர் தெருவில் திருநாராயண அய்யங்கார் க்ருஹத்தில் காலையில் ஸம்பாவனை செய்யப்பட்டு ததீயாராதனை நடந்தது. மாலையில் ஸ்ரீ. உப. தையார் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் 'ஸ்ரீமதழகியசிங்கர் ப்ரபாவம்' என்ற உபன்யாஸமும் நடைபெற்றது. ஸ்ரீமதழகியசிங்கர் பூர்வாச்ரமத்திலேயே கர்ப்பஸ்ரீமானாகவும் பஞ்சயஜ்ஞங்களையும், நித்யநைமித்திககர்மாக்களையும் பூர்ணமாகச்செய்து வந்து இன்று ஸ்ரீந்ருஸிம்ஹன் நியமனப்படி க்ராமே

க்ராமே எழுந்தருளி உபகாரம் செய்துவருவதும் ஸபையில் எடுத்துரைக்கப்பட்டது

அப்பால் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்திரத்தில் திருப்பணிகைங்கர்யவிஷயமாக ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்திருக்கும் ஸ்ரீமுகம் வாசித்து ஒவ்வொருவரும் இந்த கைங்கர்யங்களில் அனுப்ரமாணமாவது அன்வயிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்பட்டது. ஸம்பாவனைக்குப் பிறகு உத்ஸவம் இனிது முடிந்தது.

திருநாராயணன்

ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம் கீழ உள் திருவீதி மடத்தில் 8-12-53 (பூராடநக்ஷத்திரம்) செவ்வாய்க்கிழமை காலையில் விசேஷ கோஷ்டி நடந்தது. இங்கு உள்ள பிரமுகர்கள் எல்லாரும் கூடியிருந்து நன்று நடந்தது. அன்று ஸாயங்காலம் ஸ்ரீ. உப. அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ஸ்ரீ அழகியசிங்கர் குணாதிசயங்களையும் தற்காலம் நடந்துகொண்டுவரும் ஸஞ்சாரத்தில் நடக்கும் அத்யத்புதமான மரியாதைகள் வகையறுவைப்பற்றியும் நன்கு உபந்யஸிக்கப்பட்டது.

இதேமாதிரி கோஷ்டி ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதியுலும் காலையில் நடந்தது.

மறுநாள் (9-12-53) புதன்கிழமை ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் திருநக்ஷத்திரம் இவ்வூர் ரிடயர்ட் ஜட்ஜ், ஸ்ரீ. உப. எஸ். ராகவ அய்யங்கார் ஸ்வாமியால் நடத்தப்பட்டு கோஷ்டியும் நன்றாக நடந்தேறியது.

நரஸிம்ஹன்,
ஸ்ரீ அஹோபிலமடம் கௌரவ ஏஜண்டு.

கரியாபட்டணம்

ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீவண்சடகோபஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம் திருத்துறைப்பூண்டி தாலூகா கரியாபட்டிணம் கிராமத்தில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 8-12-53 செவ்வாய்க்கிழமையன்று கொண்டாடப்பட்டது. பகலில் ஸ்ரீபாததீர்த்தமும் கோஷ்டிவிநியோகமான பிறகு உள்ளூர் மிராசுதாரர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸகோபால அய்யங்கார்ஸ்வாமியால் ததீயாராதனம் பண்ணிவைக்கப்பட்டு சிஷ்யர்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

திருத்துறைப்பூண்டி தாலூகா பிருந்தியங்கரையில் ஸ்ரீ அஹோபிலமடம் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்திரம் ஸ்ரீ க்ருஷ்ண மடம் ஸ்ரீநர்த்தனக்ருஷ்ணஸ்வாமிஸன்னிதியின் தர்மகர்த்தா பி. எஸ். ரங்கஸ்வாமி அய்யங்காரால் விசேஷ திருமஞ்ஜனம், ஸேவை சாத்துமுறை செய்யப்பட்டு, ஷியாரும் ஊர் சிஷ்யர்களும் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸ்ரீபாதுகைகளை மிராசுதாரர், ஸ்ரீ. உப. வி. ஸுந்தரராஜ அயயங்கார் க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி, ஸம்பாவனை பண்ணி ஸ்ரீபாததீர்த்த கோஷ்டிவிநியோகங்கள் செய்யப்பட்டு வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

எஸ். சாரங்காசாரியர்

பாதூர்

ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திருநக்ஷத்திரமஹோத்ஸவம் பாதூரில் ஸ்ரீ அழகியசிங்கரால் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை நடந்துவரும் ஸ்ரீ ப்ரஸன்னவேங்கடேசப்பெருமாள் ஸந்நிதியில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காலையில் பாடசாலை வித்யார்த்திகளின் பொருட்டு ஸ்ரீமான்கள், பி. பார்த்தஸாரதி அய்யங்கார், எஸ். கோவிந்தராஜ அய்யங்கார் இவர்களால் வழங்கப்பட்ட ஸ்ரீமதழகியசிங்கரின் திருவுருவப்படம் பாடசாலை வித்யார்த்திகளால் ஸ்தோத்ரபாடபாராயணத்துடன் வீதிவலம் வந்து பாடசாலையில் திறந்துவைக்கப்பட்டது. பிறகு 41, 42, 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்களது திருவுருவப்படங்கள் புஷ்பங்களினால் நன்கு அலங்கரிக்கப்பட்டு மேளவாத்யங்களுடனும், வேதகோஷத்துடனும்

நான்கு வீதிகளிலும் ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணி பெருமாள் மரியாதையுடன் ஸம்பாவனைகளும் கோஷ்டிக்கு ஸ்ரீபாததீர்த்த ப்ரஸாதவிநியோகங்களும் விமரிசையாக நடத்தப்பட்டது.

மாலை பாடசாலையில் ஓர் விசேஷக் கூட்டம் நடைபெற்றது. அப்போது கிராமவாஸிகளும் பக்கத்து அக்ரஹாரங்களிலிருந்து உத்ஸவத்திற்கென வந்திருந்தவர்களும் ப்ரஸன்னமாயிருந்தனர். பாடசாலை மாணாக்கர்களின் ஸ்தோத்திரபாடத்துடன் ஆரம்பமாகிய கூட்டத்திற்குக் கடலூர் அட்வகேட்டும், திருவஹீந்திரபுரம் ஸ்ரீ தேவநாதஸ்வாமி கோயில் தர்மகர்த்தாவுமான ஸ்ரீ. உப. டி. எஸ். ராமாநுஜாசர்ய ஸ்வாமி அக்ராஸனம் வஹித்து, 'ஆசார்ய மஹிமை' என்பதுபற்றி விரிவாக உபந்யாஸம் செய்தார். பாடசாலை தலைமை உபாத்யாயர் ஸ்ரீ. உப. வித்வான், தோட்டாலம், வேணுகோபாலாசார்யஸ்வாமியால் ஸ்ரீ அழகியசிங்கரின் குணாதிசயங்களைப் பற்றி வெகு விரிவாக உபந்யாஸம் செய்யப்பட்டது.

பாடசாலையின் அறிக்கை வாசிக்கப்பட்ட பின்பு, ஸ்ரீமான், கே. கோவிந்தராஜ அய்யங்கார் ஸ்வாமி, (ப்ராஞ்ச் போஸ்ட் மாஸ்டர், செங்குரிச்சி) ஸ்ரீ அழகியசிங்கரின் பரோபகாரம் பற்றி பேசினார். அதன் பிறகு வ. ரா. ஸவுந்தரராஜ அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ அழகியசிங்கருக்கு இவ்வக்ரஹாரவாஸிகளிடமிருக்கும் மஹத்தான ப்ரீதியைப் பலமுகமாக எடுத்துக்காட்டி, தாங்கள் ஸ்ரீ அழகியசிங்கரிடம் மிகவும் க்ருதஜ்ஞர்களாக இருப்பதாகத் தெரிவித்துக்கொண்டார். ஸ்ரீ பட்டாபிராம அய்யங்காரும், ஸ்ரீ ஸந்தானமய்யங்காரும் ஸ்ரீமதழகியசிங்கரின் குணவிசேஷங்களை விவரித்துப் போற்றினார்கள். பிறகு கடலூர், வக்கீல், டி. எஸ். ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, பி, ஏ. பி. எல். மதவிஷயமான கல்வியின் அவச்யத்தைப்பற்றியும், இப்பாடசாலையின் நோக்கத்தைப்பற்றியும் வெகுவாகப் புகழ்ந்து விரிவாக உபந்யாஸம் செய்தார்.

இந்த உத்ஸவத்தில் விசேஷச்ரத்தை எடுத்துக்கொண்டவர்கள்:—

ஸ்ரீ. பி. டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி
,, மணியம், ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ,,
,, தர்மகர்த்தா, ஸுந்தரமய்யங்கார் ,,
,, கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், B. A ,,
,, என். கோபால அய்யங்கார் ,,
,, ப்ரஸன்ன, நரஸிம்ஹ அய்யங்கார் ,,
,, ஏ. வெங்கடேச அய்யங்கார் ,,
,, பி. என். நாராயண அய்யங்கார் ,,
ஸ்ரீ. ராஜரத்தின செட்டியார், அவர்கள்.

மற்றும் பல ஆஸ்திகர்களாலும் பொருளுதவி செய்யப்பட்டு உத்ஸவம் சிறப்பாக நடந்தது.

முடிவில் பாடசாலை உபாத்யாயர், தூப்புல், ராஜகோபாலாசார்யஸ்வாமி வந்திருந்தோரனைவருக்கும் அத்யக்ஷருக்கும் பாடசாலை சார்பில் வந்தனோபசாரம் கூறியபின் கோஷ்டிக்கு சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டது.

ஸ்ரீமதி கனகலக்ஷ்மி ஸஹோதரிகளால் மங்களகீதம் பாடப்பட்டு இம்மஹோத்ஸவக்கூட்டம் இனிது முடிவடைந்தது.

கே. ராஜகோபாலன்

ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமியின் **82**-வது திருநக்ஷத்திர மஹோத்ஸவம், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதியாயும்,சமதமாதி ஸத்குணபூஷிதராயும், ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யஸம்பந்நராயும் சாதுர்மாஸ்யே ஸர்வஸ்மாத் ஜேஷ்டராயுமுள்ள தில்லைஸ்தானம் ஸ்ரீசடகோபராமாநுஜ யதீந்திரமஹாதேசிகன் வார்ஷிக திருநக்ஷத்ரோத்ஸவம் ஸ்ரீரங்கம் ஸ்ரீதசாவதாரப்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீஸ்வாமிதிருவடிஸம்பந்திகளாலும் மற்றுள்ள ஆஸ்திகர்களாலும் வழக்கம்போல் விஜய௵ கார்த்திகை௴ 8௳ (23-11-53) திங்கள். வெகுவிமர்சையாய்கொண்டாடப்பட்டது, ௸ உத்ஸவத்திற்கு உள்ளூர் வைதிகலௌகிக மஹான்களும், திருச்சி, தஞ்சாவூர், பங்களூர் முதலியவிடங்களிலிருந்தும் பல ஆஸ்திகர்கள் எழுந்தருளி கலந்து களித்தனர். மத்யாஹ்நம் உத்தமமான ததீயாராதனமான பின் சந்தன தாம்பூலகோஷ்டிக்கு முன் ஸ்ரீ ஸ்வாமி திருவடிதுகளும் ததேகசேஷீ என்ற மதுரகவியனைய ஆசார்யபக்தாக்ரேஸரரான பண்டிதர், ஒரகடம், ஸ்ரீ.உப. கே. ஸுதர்சநாசர்யர் ப்ரதி

வத்ஸரம்போல் இவ் வருஷமும் ஸ்ரீ ஸ்வாமி விஷயமாய் ரஸவத்தான உபபாஷாபத்யங்களாக இயற்றியனுப்பியிருந்ததை மேலப்பாளையம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸதஸ்ஸில் படித்து அர்த்த விசேஷங்களை ஸங்க்ரஹமாகவும் ரஞ்சகமாகவும் எடுத்து உபபாதித்தார். பெங்களூரிலிருந்து தேஹஸ்ரம அர்த்தவ்யாதிகளைப் பொருட்படுத்தாது வழக்கம்போல் எழுந்தருளிய பரம ரஸிகர்களான ஸ்ரீ. உப. வெங்கடாசார்யஸ்வாமி, ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. M. B. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. K. S. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி முதலியோர்களை முக்யர்களாகக்குறிப்பிடவேண்டியது.

T. S. சேஷாத்ரிதாஸன்,
தில்லைஸ்தானம்.

ஸ்ரீ கல்யாணப்ரவர்த்தினீ ஸபா, ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.

இச் சபையானது 22-11-53 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இச்சபை, இக்கலாசாலை இவைகளுக்கு பூதபூர்வாத்யக்ஷருமான ஸ்ரீ. உப. ஸ்ரீகோஷ்டிபுரம் (ஸுந்தரஸௌம்ய நாராயணாசார்ய) ஸ்வாமியினுடைய அவதார மஹோத்ஸவத்தை முன்னிட்டு மீமாம்ஸாத்யாபகரான ஸ்ரீ. உப. எஸ். கோபாலாசார்ய ஸ்வாமியினுடைய தலைமையில் கூடிற்று. அவ்வமயம் தலைவரும் அத்யக்ஷஸ்வாமிகளும் ஸ்ரீஸ்வாமியினுடைய திருக்கல்யாண குணங்களை யெடுத்து நன்கு விரிவாக உரைத்தனர். பின்னர் கார்யநிர்வாஹியால் தந்யவாதம் ஸமர்ப்பிக்கப்பட்டு வேதகோஷத்துடன் தாம்பூலதான பூர்வகமாக கூட்டமினிது கலைந்தது.

ஷெ கூட்டமானது மறுபடியும் 8-12-53 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43.வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதபூஷித ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் அவதாரதினக்கொண்டாட்டத்தை முன்னிட்டு கூடிற்று. அதுஸமயம் ஸ்ரீமதழகிய சிங்கருடைய திருவுருவப் படமானது ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து வேதகோஷ, ஸ்தோத்ரபாட மேளவாத்யத்துடன் வீதிப்ரதக்ஷிணமாக ஸபாமண்டபத்திற்கு எழுந்தருளப்பண்ணப்பட்டது. பிறகு ஸபையானது வேதாந்த வாவதூகரும் ந்யாயாத்யாபகருமான ஸ்ரீ. உப. பி. நாராயணாசார்ய ஸ்வாமியின் தலைமையில் கூடிற்று. அப்பொழுது ந்யாயாத்யாபகரான ஸ்ரீ. உப. ஏ. எஸ். க்ருஷ்ணமாசார்யஸ்வாமி உபந்யாஸகராகப்ரார்த்திக்கப்பட்டு ஸ்ரீமதழகியசிங்கருடைய கல்யாணகுணங்களை அழகாக எடுத்துரைத்தார். பிறகு மற்ற உபாத்யாய ஸ்வாமிகளும் ஸ்ரீமதழகிய சிங்கருடைய கல்யாணகுணங்களை வித்யார்த்திகளுக்கு எடுத்துரைத்தனர். தலைமை வஹித்தஸ்வாமியும் ஸ்ரீமதழகிய சிங்கரைப்பற்றி விரிவாக உபந்யஸித்தார். கார்யநிர்வாஹிகளினால் தந்யவாதம் ஸமர்ப்பிக்கப்பட்டு வேத கோஷ பூர்வகமாக தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு இனிது கலைந்தது.

ஷெ ஸபையானது 13-12-53 திங்கட்கிழமை மாலை 4மணிக்கு ந்யாயாத்யாபகரான ஸ்ரீ. உப. ஏ. எஸ். க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியினுடைய ஆத்யக்ஷ்யத்தில் கூடிற்று. அப்பொழுது வ்யாகரண சிரோமணி முதல் வகுப்பில் இருக்கும் வி. ராமாநுஜனென்பவனால் 'யஜ்ஞ:' என்ற விஷயமானது எழுதிவாசிக்கப்பட்டது. பிறகு அத்யக்ஷஸ்வாமியும் அதே விஷயத்தை விரிவாக எடுத்துரைத்தார். கார்யதர்சிகளால் தந்யவாதம் ஸமர்ப்பிக்கப்பட்டு ஸபை முடிவுற்றது.

பிறகு ஸபையானது 16-12-53 புதன்கிழமை மாலை 3மணிக்கு சென்னை கலாசாலையில் அத்யாபகரான ஸ்ரீ. உப. பி. பி. கே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி (ந்யாய வ்யாகரண சிரோமணி) யினுடைய தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் அந்த ஸ்வாமி 'ஸ்ரீ அஷ்டாக்ஷர மாஹாத்ம்யம்' என்பதைப்பற்றி விரிவாக வித்யார்த்திகளின் பொருட்டு உரை நிகழ்த்தினர். பின்பு தந்யவாதம் ஸமர்ப்பிக்கப்பட்டு இனிது முடிவடைந்தது.

பின்பு 29-12-53 செவ்வாய்க்கிழமை நமது கலாசாலையில் ஆரம்பகாலம்முதல் ந்யாயாத்யா

(தொடர்ச்சி 49ம் பக்கம் பார்க்க)

ஶ்ரீ:

ஸ்வாகதபத்ரிகைகள்

(3)

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌯𑍋𑌗𑌿𑌵𑌰𑍍𑌯𑌕𑌰𑍁𑌣𑌾𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑍋𑌦𑌯𑌾𑌤𑍍
𑌶𑍍𑌰𑍀𑌵𑌣𑍍𑌶𑌠𑌾𑌰𑌿𑌸𑌂𑌯𑌮𑌿𑌵𑌰𑍋 𑌯𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌵𑌾𑌸𑌮𑌿𑌹 ।
𑌯𑍋𑌽𑌕𑌾𑌰𑍍𑌷𑍀𑌤𑍍 𑌶𑍍𑌰𑍀𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌨𑌰𑌹𑌰𑍇𑌸𑍍𑌸𑌂𑌪𑍂𑌜𑌨𑌾𑌦𑍍𑌯𑌂 𑌮𑌹𑌾
𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌯𑌤𑍀𑌶𑌂 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑍈 ॥ 1
𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌮𑌰𑍍𑌶𑌨𑍀𑌯𑌵𑌿𑌵𑌿𑌧𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌪𑌾𑌰𑌜𑍍𑌞𑌤𑌾𑌃
𑌰𑌾𑌜𑌨𑍍𑌤𑍇 𑌬𑌹𑌵𑍋 𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌰𑍍𑌯𑌾 𑌇𑌹 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌣𑌵𑌪𑌾𑌰𑌦𑍃𑌶𑍍𑌵𑌵𑌿𑌬𑍁𑌧𑌸𑌨𑍍𑌦𑍋𑌹𑌸𑌮𑍍𑌪𑍋𑌷𑌕
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍! 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹! 𑌤𑌤𑍍𑌰 𑌭𑌵𑌤𑍇 𑌸𑍁𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌮𑍍 ॥ 2
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌾𑌸𑌙𑌗𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑌾𑌪𑌕𑌲𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑍇 𑌸𑌾𑌦𑌰𑌾
𑌪𑍂𑌰𑍍𑌣𑌾 𑌜𑍀𑌵𑌨𑌮𑌾𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌃 𑌪𑌾𑌰𑌤𑍍𑌰𑌿𑌕𑍇 𑌵𑌯𑌂 𑌤𑌵 ।
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑌮𑌠𑌧𑍁𑌰𑌨𑍍𑌧𑌰𑍋 𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑍍
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑌬𑍋𑌧𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑌂 𑌭𑌵𑍍𑌯𑌾𑌤𑍍𑌮 𑌪𑌾𑌦𑌾𑌪𑌯𑌃 ॥ 3
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑍇 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑍇
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌦𑌾𑌙𑍍𑌕𑍍𑌰𑌵𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌾𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 𑌯𑌤𑌿𑌪𑌤𑍇𑌸𑍍𑌸𑌂𑌦𑌰𑍍𑌶𑌨𑍇 𑌤𑌤𑍍𑌪𑌰𑌾
𑌨𑍀𑌰𑍋𑌗𑌾 𑌨𑌿𑌰𑌪𑌾𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌸𑍍𑌸𑌤𑌤𑌂 𑌭𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌦𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ॥ 4

𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑌾𑌷𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌾𑌯𑍇𑌣 𑌗𑍍𑌰𑌥𑌿𑌤𑌾 𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌲𑌿𑌕𑌾 ।
𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑌯𑍋𑌰𑌰𑍍𑌪𑌿𑌤𑌾 𑌮𑍁𑌦𑌾 ॥ 5

𑌚𑍇𑌨𑍍𑌨𑌪𑍁𑌰𑍀
9-11-53

𑌇𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑌤𑌿
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌪𑌾𑌰𑌂, 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌣𑍍𑌣𑌪𑌿𑌳𑍍𑌳𑍈, 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃,
𑌸𑌾𑌹𑌿𑌤𑍍𑌯𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑌮𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌚𑌾𑌰𑌤𑍍.

(4)

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌵𑌿𑌲𑍋𑌲𑌾𑌨𑌿𑌰𑌵𑌧𑌿𑌕𑌪𑌰𑌸𑍍𑌵𑌾𑌦𑌶𑍀𑌲𑍇 𑌵𑌿𑌶𑌾𑌲𑍇
𑌲𑍋𑌕𑌾𑌯𑌾𑌲𑍋𑌕𑌦𑌾𑌨𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌵𑌿𑌤𑌰𑌣𑌯𑍋𑌸𑍍𑌸𑌵𑍍𑌯𑌦𑌾 𑌜𑌾𑌗𑌰𑍂𑌕𑍇 ।
𑌤𑍇 𑌨𑍇𑌤𑍍𑌰𑍇 𑌨𑌿𑌨𑌿𑌷𑍍𑌕𑍇𑌲𑌷𑍇 𑌤𑌵 𑌨𑌰𑌹𑌰𑌿𑌮𑌯𑍇 𑌚𑍋𑌦𑌯𑍇𑌤𑌾𑌂 𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰
𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌤𑍍𑌸𑌰𑍋𑌜𑌂 𑌨𑌯𑌨𑌮𑌪𑌿 𑌜𑌯𑍋 𑌵𑍇𑌦𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌭𑌵𑍍𑌯𑌾𑌤𑍍 ॥
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑍋𑌣𑍀𑌷𑍁 𑌗𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌤𑌨𑌮𑌪𑌿 𑌪𑌵𑌃 𑌕𑌸𑍍𑌵𑌮𑌾𑌶𑍍𑌰𑌾𑌪𑌯𑌦𑍍𑌭𑌾𑌂
𑌸𑍍𑌤𑌂𑌭𑌂 𑌪𑌾𑌤𑍁𑌸𑍍𑌯 𑌕𑌾𑌪𑌟𑍍𑌯𑌵𑌶𑌗𑍃𑌹𑌸𑌭𑌾𑌸𑍍𑌤𑌂𑌭𑌤𑍋 𑌨𑌿𑌸𑍍𑌸𑍃𑌤𑍋 𑌯𑌃 ।

दैत्येन्द्रे सर्वलोकप्रभववितरणे तस्मिन् सत्त्व-
रूपो
देवो हस्तिगिरीश्वरो वितरतु जगतां शं च लक्ष्मीनृसिंहः ॥
प्रह्लादाह्लादहेतुं हतजननिलयो त्राणं शास्त्रयोनिं
वर्णानां तत्त्वं श्रुतीनां शरणमपि जगतां प्राप्य पादारविन्दम् ।
सेवेशं श्रीनिवासं हरिचरणसमायातनमस्कं पवित्रं
श्रीनाथं यादवानां यतिपतिनिगमाज्ञायुक्तव्यापदं गुरूणाम् ॥

इन्द्रात्मा तविषीयान् लवतरोऽजन्ता त्रयीमौलित
स्तम्भे जङ्घेजवक्तः वाक्निचयेनाब्धिना नानापि हन्तुः ।
गीता नारायणोक्तिस्त्वनुदिनं ब्रह्मांबायिप्राविका
वर्णानां नवकं च दा विजयतां विश्वातनां संततये ॥

श्रुतीनां सारसं प्रकटयदेवं तनाह्यतां
ध्यायेच्च सार्धं पारावाराहे लक्ष्मीतनुर्वा ।
वितन्द्रान्ताना निरवधि साधवे चैव विधय-
विशिष्टादैतं नः प्रथयतु इतं श्रीनारायणा ॥

श्रीरङ्गं यतिराजपुण्यकरणाब्धाम्बं पवित्रं इतं
शिष्यैः प्रतिपादयतु जयिनां शोभादयं पारयतु ।
विद्वद्भिर्निषेवणीयमहिमा शास्त्रो विशालाशयो
जीयाद्रङ्गयतीन्द्रपादनृसिंहायुष्मान्महान्तः ॥

शुभयति जपिनां सत्त्वसंप्रसक्ते
सकलदर्शितसङ्घं सद्गुणव प्रयाङ्क्षे ।
निविडनिगमसारे श्रीहरे भक्तियोगं
जनयति हि सदृष्टज्योतिषां दृष्टिवातः ॥

पञ्चाङ्गः कालवर्षे भवाद्भुतलघुदेशस्थलीनो देशीयं
सर्वेयात्रापुण्य शास्त्रविद्युष्टं विद्वान् वेदविद्यानवद्या ।
सद्धर्मो यत्र भाति जयतु जगतीदं राजतां राजसत्त्वा
ज्ञानानोकप्रसारो भवतु भवहरः प्रीयतां वासुदेवः ॥
मुदितदशवशा सर्वपुण्यकाङ्क्षिः प्रकटितशास्त्रसारा साहायमेयम् ।
विश्रुतहरिनामा कविकवकन्या पारावारसत्त्वेना वशीकरो
तु ॥

इति श्रीशङ्कोचाचार्यवादयोर्युक्तिवचनयुक्तम् ।
सत्विता पद्याया हृद्या भवतु धीमताम् ॥

वरददेशिकाचार्यः,
श्रीभाषाभाष्यकारः, श्रीनिवासपुर् मैसूरुपुर्,
चामराजनगर्, मैसूर् जिल्ला.

ஸ்ரீ:

திரு எவ்வுள்ளூரில் மஹோத்ஸவங்கள்

ஸ்ரீ மதஹோபிலமடம் திவ்யாஸ்தானத்தில் 42-வதுபட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் வார்ஷிகதிருநக்ஷத்திரமஹோத்ஸவம் ஸ்ரீ அழகியசிங்கரது ப்ருந்தாவனத்தில் விஜயஹூ தைமீ 11வ ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீமதழகியசிங்கரின் அநுக்ரஹத்தை முன்னிட்டு வேத ப்ரபந்த க்ரந்தபாராயணாதிகளுடன் உபக்ரமிக்கப்பட்டது. ப்ரதிதினமும் இரண்டு வேளைகளிலும் அத்யந்தம் பக்திமான்களாயும், அஹமஹமிகயா அநன்யப்ரயோஜனமாக கைங்கர்யம் செய்யவேணுமென்ற ஆஸ்தையை உடையவர்களுமான ஸுமார் 40 ஸ்வாமிகள் பாராயணங்களைச் செய்து வந்தனர். இரண்டு வேளைகளிலும் சாற்றுமறையாகி குருபரம்பரையின் தனியன்கள் ஸேவிக்கப்பட்டு தீர்த்தவிநியோகாதிகள் நடந்து வந்தன. இக்கைங்கர்யத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்குப் பத்து நாட்களிலும் இரண்டு வேளைகளிலும் ததீயாராதனம் நடத்தப்பட்டு வந்தது. இம்மஹோத்ஸவமத்தியில் ஸ்ரீ வீரராகவப்பெருமாளின் ப்ரஹ்மோத்ஸவமும் வந்து சேர்ந்ததால் ஸ்ரீவைஷ்ணவஸம்ருத்திக்குக் குறைவேயில்லை. காலையில் ப்ரஹ்மோத்ஸவத்திற்கான அத்யாபகர்களின் மதுரமான பாராயணங்களுடன் வேதவித்துக்களின் வேதகோஷங்கள் முழங்க, அதன் பிறகு ஸ்ரீ அழகியசிங்கரின் உத்ஸவத்திற்கான உபயவேதக்ரந்தாதிபாராயணங்கள் ஒலிப்ப, மத்யாஹ்னத்தில் ததீயாராதனமான பிறகு வெற்றிலை பாக்கு கோஷ்டிக்கான பாராயணங்கள் எதிரொலிக்க, மாலையில் ப்ருந்தாவனத்தில்பாராயணம், இரவு பெருமாளின் புறப்பாட்டின்போதுபாராயணம் என்று ஸர்வகாலமும் உபயவேதகோஷத்தால் சூழப்பட்டு விளங்கியது வீக்ஷாரண்யக்ஷேத்திரம்.

ப்ரஹ்மோத்ஸவத்தின் மூன்றாவது திருநாளன்று பெரியதிருவடிமேல் ஆரோஹணித்து காலையில் 5-வது மணிக்கு ஸ்ரீ வீரராகவன் வெளிக் கிளம்பினான். அன்று த்வாதசியும் சேர்ந்தது. 7 மணிக்கு வாஹனமண்டபத்திலிருந்து புறப்பாடாகி ஈக்காடேற எழுந்தருளி உள்ளே எழுந்தருள 12 மணியாயிற்று. வேதப்புள்ளேறி வந்த வீரராகவனை வீதியெங்கும் வணங்கி வழிபட்டனர் பக்தகோடிகள். ஸ்வாமிகளனைவரும் பாராயணத்துடன் அநுயாத்திரையாக எழுந்தருளினார்கள். அன்று மதராஸ் முதலியவிடங்களிலிருந்து அநேக ஆஸ்திகர்களும் எழுந்தருளவே மிக குதூஹலத்துடனும் சோபையுடனும் விளங்கிற்றுத் திருஎவ்வுள்ளூர். பெருமாள் உள்ளே எருந்தருளியானதும் மாலைகளைக் களைந்து சத்ரசாமரமேளவாத்தியங்களுடன் ஸ்ரீஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனுடைய ப்ருந்தாவனத்திற்குக்கொண்டுபோய், ஸ்ரீ ஶடகோயபதீந்த்ரமஹாதேசிகனுக்குச் சாத்தப்பட்டது. அங்கிருந்து களைந்து ஸ்ரீ ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் அபராவதாரமெனக் கொண்டாடப்படும் நம் ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய ப்ருந்தாவனத்திற்கு எடுத்துக் கொண்டுபோய் அங்கு எழுந்தருளியுள்ள ப்ராசார்யர்களுக்குச் சாற்றியபின் ஸ்ரீ அழகியசிங்கருக்கு சாத்தப்பட்டது. தன்னால் புனர்நிர்மாணம் செய்விக்கப்பட்டுத் தேஜோராசியாக விளங்கும் பெரிய திருவடிமேலிருந்து ஸ்ரீ வீரராகவன் சூடிக்களைந்ததும், பூர்வாசார்யபரிக்ருஹீதமுமான அப் பெரிய மாலைகளை யணிவித்தபோது ஸ்ரீமதழகியசிங்கரது திவ்யமங்களவிக்ரஹத்தில் பொலிவு சுடர்விட்டு ப்ரகாசித்தது. பக்தகோடிகளனைவரும் பலகாலும் தெண்டனிட்டு வணங்கி ஆனந்தமெய்தினர். அன்று ஸுமார் 200 பேருக்கு விசேஷமாக பக்ஷ்யாதிகளுடன் ததீயாராதனம் நடந்தேறியது. அன்றிரவு சிறிய திருவடியேறி பவனி வந்த வீரராகவனை வாணவேடிக்கைகளுடன் பல பக்தர்கள் தர்சனம் செய்து மகிழ்ந்தனர். மறுநாள் காலை

யில் திருவனந்தாழ்வான் மேல் நாச்சிமாரோடு பரமபதநாதனாக எழுந்தருளிய பத்மநாபனைக் கண்ணாரக் கண்டு களித்துக் கைகளாலாரத் தொழுது வாயால் துதித்து வழிபட்டனர் அவனது இன்னடியார்கள்.

திருநக்ஷத்ரமஹோத்ஸவதினத்தன்று நாச்சியார் திருக்கோலத்துடன் எவ்வுட்கிடந்தமால் அதிகாலையில் 5 மணிக்குப் புறப்பட்டு விட்டான். முதலில் ஸ்ரீமத் திவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஸன்னிதிக்கெழுந்தருளி, திருவாராதனம் கண்டருளி, மாலையையும் ஸ்ரீஶடாரியையும் ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன், ஸ்ரீ ஶடகோபராமாநுஜயதீந்த்ரமஹாதேசிகன் முதலான ஸ்ரீமதழகியசிங்கர்களுக்கு ப்ரஸாதித்துவிட்டு அங்கிருந்து ஸ்ரீ அஹோபிலமடத்திற்கெழுந்தருளினான். அங்கு வழக்கம்போல் பூர்ணகும்பத்துடனும் உபஹாரங்களுடனும் எதிர்கொள்ளப்பட்டு உள்ளே எழுந்தருளினான். அங்கு திருவாராதனம் கண்டருளி கோஷ்டிவினியோகாதிகளானதும் அங்கிருந்தெழுந்தருளினான். பிறகு கீழ்க்குளக்கரை வழியாக எழுந்தருளி தென் குளக்கரையிலுள்ள ஸ்ரீமதழகியசிங்கர்களின் ப்ருந்தாவனவாயிலிலிருந்த பந்தலுக்கெழுந்தருளினான். அப்போது முன் மண்டபத்தில் 42-வதுபட்டம் அழகியசிங்கரை மங்களாஶாஸனம் பண்ணும்படியாக எழுந்தருளப்பண்ணி இருந்தது. அப்போது ஓர் பீதாம்பரத்தையும் உபஹாரங்களையும் ஸமர்ப்பிவிக்க வீரராகவன் அமுது செய்தருளினான். அங்கு வழக்கப்படி மாலை மரியாதைகளை பூர்வாசார்யர்களுக்கு சாத்தப்பட்ட பிறகு ஸ்ரீ அழகியசிங்கருக்கு சாத்தப்பட்டது. பிறகு பெருமாளும் அங்கிருந்தெழுந்தருளி அநேகவிடங்களில் மண்டபப்படி கண்டருளி ஈக்காட்டிற்கெழுந்தருளினர். அங்கு திருவாராதனாதிகளானதும் திரும்பி கோயிலுக்குள் எழுந்தருளி தேசிகன், ஆண்டாள் ஸன்னிதிகளில் திருவாராதனமும் கோஷ்டியுமாகி கண்ணாடியறைக்கு எழுந்தருள பகல் 1 மணியாயிற்று.

இதற்குள் ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ அழகியசிங்கருக்குத் திருமஞ்ஜனம் கண்டருளப்பண்ணுவித்து பாராயணாதிகள் நடந்தேறின. ஸ்ரீ வீரராகவன் மாலைபரிவட்டங்களை திருப்பல்லக்கில் ஏற்றுவித்து நான்கு பெரிய வீதிகளிலும் விசேஷ மேளதாளங்கள் முழங்க, ஸ்வஸ்தி வாசனத்துடன் ஊர்வலமாகக் கோயில் துறையார் எழுந்தருளப்பண்ணினார்கள். ஸ்த்ரீபால வ்ருத்தர்களான அநேகர் ஸ்ரீமதழகியசிங்கருக்கு எவ்வுள்கிடந்தான் அளிக்கும் பரிசைத் தெருக்களின் ஓரங்களிலும் மாடிகளிலும் கூட்டமாக நின்று கண்டு களித்தனர். பிறகு ப்ருந்தாவனத்திற்குள் திருப்பல்லக்கை எழுந்தருளப்பண்ணி மாலை மரியாதைகளை க்ரமமாக பூர்வாசார்யர்களுக்குச் சாற்றிய பிறகு ஸ்ரீமதழகியசிங்கருக்குச் சாத்தப்பட்டது. ஸ்ரீ வீரராகவன் அமுது செய்தருளிய விசேஷப்ரஸாதங்களும் பக்ஷ்யங்களும் அமுதுசெய்விக்கப்பட்ட பின் மங்களஹாரத்தியாயிற்று. பிறகு வேதப்ரபந்தக்ரந்தங்களுடைய சாற்றுமுறை மிக அழகான முறையில் நடந்து, ஸ்ரீ வீரராகவன் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸம்பாவனையும், நம்மாழ்வார் தொடங்கி ஸ்ரீமதழகியசிங்கர் பர்யந்தமான ஆசார்யர்களுக்கு வழக்கப்படி ஆசார்ய ஸம்பாவனையும் பண்ணப்பட்டது. உடனே கோஷ்டிக்குத் தீர்த்தவினியோகாதிகளும் ஸ்ரீ பாததீர்த்தமுமாகி பகவத்ப்ரஸாதவினியோகமுமாயிற்று. மணி மூன்றுக்கு மேலாகியும் சிறு குழந்தைகளுள்பட அநேக பக்தர்கள் மிகவும் ச்ரத்தையுடனும் பொறுமையுடனும் காத்திருந்து ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்தையும் ப்ரஸாதங்களையும் அமைதியுடன் பெற்றுக்கொண்டனர்.

பின்பு ஸுமார் 700 பேருக்கு விசேஷததீயாராதனம் பஞ்சபக்ஷ்யங்களுடனும் சித்ரான்னங்களுடனும் வெகு விலக்ஷணமாக நடந்தது. இரவு 7 மணிக்கு வேதகோஷத்துடன் தாம்பூலம் ஸமர்ப்பிக்கப்பட்டது. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவீரராகவஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன் அநுக்ரஹித்தருளிய பலமந்த்ராக்ஷதைகளை எல்லோருக்கும் வினியோக்கப்பட்டது.

இந்த உத்ஸவஸமயங்களில் ‚‚ஆசார்யபக்தியின் பெருமை'' என்பதுபற்றி ஸ்ரீ. உப. வித்வான், ஸாரஸாரஜ்ஞ, சிரோமணி, பழவேரி, சக்ரவர்த்தி, ராஜகோபாலாசார்ய ஸ்வாமியும், ‚‚ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரபாவம்'' என்பதுபற்றி ஸ்ரீ. உப. வித்வான், ஸ்வர்ணம், ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியும், ‚‚சிஷ்யக்ருத்யம்'' என்பது பற்றி ஸ்ரீ. உப. வித்வான், சிரோமணி பாதூர் தூப்புல், ராமபத்ராசார்யஸ்வாமியும் மிகவும் அழகான உபந்யாஸங்களை எளியநடையில் செய்தருளினார்கள். இதைக் கேட்ட அஸ்மதாதிகள் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்தால் இவ்வுபந்யாஸங்களைத் திருச்செவிசாத்தியருளி ஸாதித்தபடி ‚‚... ... பாடக்கேட்டு வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக'' என்றல்லவோ ஸாதித்துத் திருவுள்ளம் உகந்தாகும் என்று எண்ணும்படியிருந்தது. இந்த இவ்வுத்ஸவத்தை நேரில் ஸேவித்தவர்கள் ஸ்ரீமதழகியசிங்கர்கள் ஸாக்ஷாத்தாக எழுந்தருளியில்லாததைத் தவிர வேறு குறையில்லாதபடி நடக்கும்படி ஸகல ஏற்பாடுகளையும் செய்தவரும், அத்யந்தம் ஆசார்யபக்திபூர்ணராயும் உள்ள வக்கீல், ஸ்ரீ. உப. எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியின் ஆசார்யபக்தியைப்போற்றினர். இந்த மஹோத்ஸவம் சிறப்புறக் காரணமாயிருந்த ஸ்ரீமான்கள், திருநின்றவூர், லாலாபேட்டை தேசிகாசார்யஸ்வாமி, பாராஞ்ஜி, சக்ரபாணி அய்யங்கார் ஸ்வாமி சென்னை, அட்வகேட், எஸ். வி. வேணுகோபாலாசார்ஸ்வாமி, பேபர் மெர்ச்சண்ட், எம். க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, சேத்பட்டு ஸ்ரீ ஜம்னுதாஸ் கோகுல்தாஸ் முதலானோர்களின் பேருதவியும் ஆதரவும் குறிப்பிடத் தக்கது.

ஸ்ரீ அழகியசிங்கர் ப்ருந்தாவனத்தில் விடாயாத்தி உத்ஸவமும் மூன்று தினங்கள் நடைபெற்றது. வார்ஷிகாராதனமும் விசேஷமாக ஐந்து தினங்கள் பாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு நடந்துவருகிறது. ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்திரமஹோத்ஸவம் மிக விமரிசையாக நடந்தேறியதற்கு முக்கிய காரணம் ஹார்த்தமான பக்தியேயாகையால், இதில் ஒவ்வொருவரும் தந்தாம் ஶக்திக்கநுகுணமாகவும், அதிகாராநுகுணமாகவும் ஶாஸ்த்ரோக்தமான வழியில் பகவத்ப்ரீத்யர்த்தமாக உபகரித்திருக்கிறபடியால், இம்மாதிரி எதிர் பார்த்ததற்கு அதிகமாக உதவிய அனைவருக்கும் ஸ்ரீமதழகியசிங்கர்களநுக்ரஹத்தினால் ஸகலவித ஶ்ரேயஸ்ஸுக்களும் உண்டாகும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ வீரராகவனையும் ப்ரார்த்திக்கிறோம்.

இவ்வருஷம் ஸ்ரீ வீரராகவன் திருத்தேர் ஜீர்ணோத்தாரணம் ஸுமார் 12,000 ரூபாய்கள் வரை செலவழித்து புதிய தேர்ச்சீலைகளுடன் வெகு அழகிய தோற்றத்துடன் விளங்கியது. பெருமாள் விடியற்காலையில் ரதாரோஹணம் செய்து மிகவும் நேர்த்தியாக உத்ஸவம் கண்டருளினார். உத்ஸவகாலத்தில் விசேஷ திருக்கோலங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டிருந்ததை கண்டு பக்தர்கள், ஸ்ரீ ராகவனின் த்ருஷ்டிசித்தாபஹாரித்வத்திற்கு வஶப்பட்டு ஆனந்தமெய்தினர். உத்ஸவங்கள் குறிப்பிட்டபடி காலங்களில் நடந்தன. இவ்வருஷம் உத்ஸவம் நன்கு நடைபெற ப்ரதானகாரணமான ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அநேக சாதுர்மாஸ்யங்களெழுந்தருளியிருந்து ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தான பரிபாலனத்தை நடத்திவரும்படி மாலோலனும் எவ்வுட்கிடந்தானும் அருளவேணுமென்பது நமது ப்ரார்த்தனை.

ஸ்ரீமதழகியசிங்கர் நியமனத்தை சிரஸா வஹித்து மிகநேர்மையாக திருவுள்ளமுகக்கும்படி நிர்வஹித்து வருபவரும், ஸ்ரீ வீரராகவனுக்குக் கைங்கர்யம் செய்வதில் அதிக உத்ஸாஹமுள்ளவருமான தேவஸ்தான ஏஜண்டு, ஸ்ரீ. உப. என். ஸி. கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியின் பெருமுயற்சி போற்றத்தகுந்தது.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

ஸ்ரீமாலோலன் பெங்களூர் துளசி தோட்டத்தில் 5 தினங்கள் கமிட்டியாரால் ஆராதிக்கப்பட்டு 29–10–53 இரவு 9 மணிக்கு பசவங்குடி ராகவாசாரியர் க்ருஹத்திற்கெழுந்தருளினார். அன்றிரவே பசவங்குடி சங்கராபுரத்திலுள்ள கம்பளி ராமண்ணா ஐயங்கார் க்ருஹத்திற்கெழுந்தருளினார். ஸ்ரீமாலோலன் திருவடிகளில் சிறிய குழந்தை முதல் எல்லோருடைய பாரங்களையும்ஸமர்ப்பிக்கவேண்டுமென்று ஸ்ரீமதழகியசிங்கரை ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீமதழகியசிங்கர் சிறியவர்முதல் பெரியவர் வரை உள்ள மஹாவிச்வாஸத்தைக்கண்டு அகமகிழ்ந்து அவர்களுடைய ப்ரார்த்தனையை முடித்துவைத்தாயிற்று. 21–10–53 பகல் 3 மணிக்கு பக்தர்களுடையப்ரார்த்தனைக்கிணங்க ‘வெதொ ய[illegible]’ என்கிற விஷயத்தைப் பற்றி ஸ்ரீ அழகியசிங்கர் உபந்யஸித்தாயிற்று. பசவங்குடியிலுள்ளவர்களனைவரும் தன் கடமையை உணர்ந்து க்ருதார்த்தரானார்கள். அன்றிரவு மறுபடியும் துளசிதோட்டத்திற்கெழுந்தருளினார். 1–11–53 பகல் 4மணிக்கு துளசிதோட்டத்தில் ஸ்ரீமதழகியசிங்கர் தன் ச்ரமத்தையும் பாராமல் சிஷ்யர்களுடைய ப்ரார்த்தனையையே பெரிதாக எண்ணி ஆழ்வார்கள் வைபவம் என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தாயிற்று. 4–11–53 பகல் 4 மணிக்கு சிக்பேட்டையிலுள்ள காலஞ்சென்ற கருடாச்சாரியர் க்ருஹத்திற்கு ஸ்ரீமாலோலன் எழுந்தருளி ராத்ரி ஆராதனமும் ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவத்தையும் முடித்துக்கொண்டு அங்கிருந்து ராத்ரியே கவிபுரத்திலுள்ள வேதாந்தாசார்யர் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். 5–11–53 இரவு விச்வேச்வரபுரத்திலிருக்கும் நாராயண அய்யங்கார் க்ருஹத்திற்கெழுந்தருளினார். 6–11–53 ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு விச்வேச்வரபுரத்திலேயே இருக்குமவர் தம்பி கோபாலசாமி அய்யங்கார் க்ருஹத்திற்கெழுந்தருளி மறுநாள் இரவு மல்லேச்வரத்திற்கு எழுந்தருளினார். 8–11–53ல் மல்லேச்வர அக்ரஹாரவைதிக அபிமானிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க வேதாந்தவர்த்தினீ ஸபைக்கு சத்ரசாமராதி ஸகலபிருதுகளுடன் எழுந்தருளி ஸபையின் நோக்கத்தைப்பற்றியும் வைதிகர்கள் அநுஷ்டிக்கவேண்டிய ஆசாரத்தைப் பற்றியும் உபந்யஸித்தாயிற்று. ஸபா நிர்வாஹிகள் பரமாநந்த பரிதர்களாய் ஸ்ரீமதழகியசிங்கர் திருவடிகளில் ஸம்பாவனை முதலியவைகளை ஸமர்ப்பித்து க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொண்டார்கள். அங்கிருந்து புறப்பட்டு ராமமந்திரத்திற்கு எழுந்தருளி அதின் நிர்வாஹிகள் ப்ரார்த்தனைக்கிணங்கி பெங்களூர் வாஸிகளின் பக்திச்ரத்தையை பார்த்து தன்னுடைய ச்ரமத்தையும் பாராமல் ச்ரோதாக்களின் தினவு அடங்க உபந்யஸித்தாயிற்று. மல்லேச்வர வாஸிகள் ஸ்ரீமதழகியசிங்கர் லோகோஜ்ஜீவனார்த்தம் செய்துவரும் அனேககார்யங்களைப்பற்றி புகழ்ந்து மேல்மேலும் எங்களுக்கு ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹம் பூர்த்தியாக இருக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். அங்கிருந்து அன்றிரவே புறப்பட்டு சேஷாத்ரிபுரத்திலிருக்கும் கோபால ஐயங்கார் க்ருஹத்திற்கெழுந்தருளி அவரால் நன்காராதிக்கப்பட்டு 9–11–53 இரவு துளசிதோட்டத்திற்கு எழுந்தளினார். 10–11–53ல் 10 தினங்களாக வேத ப்ரபந்த புராண பாராயணங்களுட னுபக்ரமிக்கப்பட்டு நடந்துகொண்டுவந்த 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வருஷாராதனம் வெகு விமர்சையாக நடத்தப்பட்டது. பெங்களூர் வாஸிகளுக்கு ஸ்ரீமாலோலன் தங்கள் ஊரைவிட்டு எள்ளுவது மனவருத்தமாக இருந்ததேயாகிலும் தங்களைப்போல் இதரநகர்வாஸிகளும் ஸ்ரீமாலோலனையும் ஸ்ரீமதழகியசிங்கரையும் ஸேவிக்க ஆவலுடன் இருப்பதால் தங்கள் கஷ்டத்தை பொறுத்துக்கொண்டு 11–11–53 பகல் 3 மணிக்கு ஸ்ரீமதழகியசிங்கரை அட்டப்பல்லக்கில் எழுந்தளப்பண்ணி முதல் வகுப்பு மரி

யாதையுடன் ஊர்வலமாக அவ்வூர் லௌகிகப்ரமுகர்களும்வைதிகர்களும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு அவ்வூர் எல்லைவரை வந்து ஸ்ரீமதழகியசிங்கர் ஸந்நிதியில் தங்களுடைய க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபித்துவிட்டு அவரவர்கள் தங்களுடைய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். பெங்களூர் நகரில் ஸுமார் 130 நபருக்கு ஸமாச்ரயணமும் 95 நபருக்கு பர ஸமர்ப்பணமும், 12 நபருக்கு ப்ராயச்சித்தப்ரபதனமும் 3 நபருக்கு க்ரந்தோபதேசமும் ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹத்தினால் நடந்தேறியது. 11-11-53 இரவு 8 மணிக்கு 13 மைல் தூரத்திலுள்ள கங்கேரிக்கெழுந்தருளினார். அங்கு மிக ஜலவசதியுடன் கூடின மைஸூர் ஸ்டேட்டைச் சேர்ந்த முசாபரிபங்களாவில் தங்கியிருந்தார். 9 நபருக்கு ஸமாச்ரயணமும் 4 நபருக்கு சரணாகதியும் நடந்தேறியது. பெங்களூர் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கரின் பிரிவைத் தாங்காமல் இவ்வூர் வந்து ஸேவித்துப்போனார்கள். இங்கிருந்து 12-11-53 இரவு புறப்பட்டு 10 மைல் தூரத்திலுள்ள பிடுதி ஸ்ரீநிவாஸர் கோவிலுக்கு எழுந்தருளினார். அங்கிருந்து 13 மைல் தூரத்திலுள்ள ராமநகர் முசாபரிபங்களாவுக்கு பகல் 2 மணிக்கு புறப்பட்டு எழுந்தருளினார். 14-11-53 பகல் 3 மணிக்கு இங்கிருந்து புறப்பட்டு 12 மைல் தூரத்திலுள்ள மளூர் அப்ரமேயர் கோவிலுக்கெழுந்தருளினார். அவ்வூர் அக்ரஹாரவாஸிகள் மிகவும் பக்திமான்களாக இருந்தார்கள். இவ்வூரில் 9 நபருக்கு ஸமாச்ரயணம் நடந்தேறியது. 15-11-53 பகல் 1 மணிக்குப் புறப்பட்டு 10 மைல் தூரத்திலுள்ள மத்தூர் ந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கெழுந்தருளினார். இவ்வூரிலிருந்து காவேரி பாய்ச்சல் ஆரம்பமாகையால் நீர்வளமும் நிலவளமும் மிகுந்ததாயிருக்கிறது. இவ்வூர் கோவில் மிகவும் விசாலமாய் அமைந்திருக்கிறது. இவ்வூரில் 3 நபருக்கு ஸமாச்ரயணமும், 2 நபருக்கு பரஸமர்ப்பணமும் நடந்தேறியது. இவ்வூரில் 18 அடி உயரம் எழுந்தருளியிருக்கும் வரதர் வெகு ஆச்சர்யமாகத் தோற்ற மளிக்கிறார். 16-11-53 பகல் 3 மணிக்குப் புறப்பட்டு 12 மைல் தூரத்திலுள்ள மண்டயம் ஜனார்த்தனப் பெருமாள் ஸந்நிதிக்கு எருந்தருளினார். இவ்வூர் வாஸிகள் த்வாதசிக்கு ஸ்ரீமாலோலன் எங்கள் க்ராமத்திலேயே எழுந்தருளியிருக்க வேண்டுமென்று ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் ததீயாராதனத்திற்கு 120 ரூபாய் ஸமர்ப்பித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் த்ரவ்யக்குறைவைக் கருதாமல் அவர்களுடைய பக்திவிச்வாஸத்தைக் கண்டு மகிழ்ந்து அவ்வூரிலேயே த்வாதசி ததீயாராதனத்தை முடித்துக்கொண்டு பகல் 12 மணிக்குப் புறப்பட்டு 10 மைல் தூரத்திலுள்ள லிங்கய்யசத்திரத்திற்கெழுந்தருளினார். அங்கிருந்து பச்சிமவாஹினிக்கு ஸ்ரீரங்கபட்டணம் வழியாக எழுந்தருளினார். இவ்வூரில் காவேரி நதி வெகு அழகாக ஓடுகிறது. அவ்வூருக்கு மின்னும் பின்னும் தெற்கு வடக்காக ஓடும் காவேரி அவ்வூரில் மேற்குமுகமாக ஓடுவது அவ்வூர் பண்ண பாக்யமே. இவ்வூரில் 4 நபருக்கு ஸமாச்ரயணமும், 2 நபருக்கு பரஸமர்ப்பணமும் நடந்தேறியது.

இங்கிருந்து 20—11—53 பகல் 1 மணிக்கு புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள மைஸூர் நகருக்கு 1 மைல் தூரத்திலுள்ள வங்கிமண்டபத்திற்கு எழுந்தழிளினார். 21—11—53 காலை ஸ்ரீமதழகியசிங்கரால் ஸ்ரீ ஸன்னிதியில் கலியன் சாற்றுமுறை வெகு விமர்சையாக நடத்தப்பட்டது. 8 மணிக்கு மைஸூர் அரண்மனையைச் சேர்ந்த லௌகிகவைதிகப்ரமுகர்கள் ராஜாவினுடைய உத்தரவின் பேரில் ஸ்ரீ மாலோலன் அரண்மனைக்கு எழுந்தருளவேண்டும் என்று ஸ்ரீமதழகியசிங்கரைப் பிரார்த்தித்து நின்றார்கள். ஸ்ரீகார்யம் ஸ்வாமியும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸன்னிதியில் அவர்களை அறிமுகப்படுத்தினார். பிறகு அன்றையதினம் பட்டணத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தங்கப்பல்லக்கில் ஸ்ரீமாலோலனையும் ஸ்ரீ அழகியசிங்கரை பஞ்சகலசம் வைக்கப்பட்ட தந்தப்பல்லக்கிலும் எழுந்தருளப்பண்ணி முதல்வகுப்புமர்யாதைக் சேர்பட்ட யானைகள், குதிரைகள், சிப்பாய்கள், முன்னும் பின்னும் செல்ல பேரிவாத்யங்கள் முழங்க வைதிகர்கள் உபநிஷத்பாராயணம் பண்ண வெகு ஆடம்பரத்துடன் ஊர்வலமாக ஸ்ரீ அழகியசிங்கர் ராஜபோகிகளால் எழுந்தரு

ளப்பண்ணப்பட்டார். அரண்மனைவாயிலையடைந்ததும் அரண்மனையைச்சேர்ந்த வராஹஸ்வாமி கோயிலிலிருந்து ஸ்ரீசடாரி முதலிய மர்யாதைகள் கொண்டுவரப்பட்டன. பிறகு ராஜாவின் அந்தரங்க கார்யதர்சிகள் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் புஷ்பங்களை ஸமர்ப்பித்து உள்ளே எழுந்தருளும்படி பிரார்த்திக்க ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீ மாலோலனுடன் கொலுமண்டபத்திற்கு எழுந்தருளினார். ஸ்ரீ மாலோலனுக்கு இஜ்யாராதனம் நடந்ததும் ராஜாவும் தன் பந்துமித்ரர்களுடன் ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து இந்நகரும் இந்நகர்வாசிகளான நாங்களும் 100 வருஷகாலமாக அடையாதிருந்த பெரும்பாக்யத்தை அழகியசிங்கர் அநுக்ரஹத்தினால் பெற்றோம் என்று பிரார்த்தித்து நிற்க ஸ்ரீ அழகியசிங்கரும் ராஜாவிற்கு க்ஷேமாபிவிருத்தியும் ஐச்வர்யாபிவிருத்தியும் தர்ம அபிவிருத்தியில் ஊக்கமும் மேல் மேல் உண்டாகவேண்டும் என்று பலமந்த்ராக்ஷதை கொடுத்து அநுக்ரஹித்தாயிற்று. பிறகு பகல் 1 மணிக்கு மாலோலன் ஸகல பிருதுகளுடன் வராஹர் கோயிலுக்கு எழுந்தருளப்பண்ணப்பட்டு விசேஷ ததீயாராதனமும் நடத்தப்பட்டது. 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் 9-வது மாஸாராதனம் மிக விமர்சையாக நடத்தப்பட்டது. இரண்டு நாள் மஹாராஜாவினால் ஆராதிக்கப்பட்டு 23-11-53 காலை 9 மணிக்கு ஸ்ரீமாலோலன் ஸகலமர்யாதைகளுடன் அவ்வூர் அஹோபிலமடத்திற்கெழுந்தருளினார். மடத்திலேயே அனந்தாச்சாரியர் முதலிய சில பிரமுகர்களால் ஸ்ரீ மாலோலன் ஆராதிக்கப்பட்டார். ஸ்ரீமதழகியசிங்கரால் 5 தினங்கள் வித்வத்ஸதஸ் நடத்தப்பட்டது. அவ்வூர் ப்ரஸித்தபண்டிதர்களையும் வெளியிடத்திலிருந்து வந்த பண்டிதர்களையும் கொண்டு வேதாந்த, ந்யாய, மீமாம்ஸா, வ்யாகரண, ஜ்யோதிஷா சாஸ்த்ரங்களில்வாக்யார்த்தங்களை சொல்லக்கேட்டு ஆனந்தித்தாயிற்று. பிறகு பண்டிதர்களுக்கு ஸ்ரீ அழகியசிங்கரால் உசிதமான ஸம்பாவனை அனுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கரால் அவ்வூர் அஹோபிலமடத்தில் ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஆதிவண்சடகோபஸ்வாமி உத்ஸவவிக்ரஹங்கள் ப்ரதிஷ்டை பண்ணப்பட்டது. 29—11—53 இரவு ஒண்டிக்கொப்பலிலுள்ள ஜனார்த்தன அய்யங்கார் கிரஹத்திற்கு எழுந்தருளப்பண்ணப்பட்டார். ஸ்ரீ மாலோலன் ஒரு நாள் அவரால் நன்றாக ஆராதிக்கப்பட்டு மறுபடியும் அவ்வூர் அஹோபிலமடத்திற்கெழுந்தருளினார். அவ்வூர் நம் சிஷ்யர்களுடையவும் பரகாலஸ்வாமி சிஷ்யர்களுடையவும் பிரார்த்தனைக்கிணங்க ஸ்ரீ அழகியசிங்கர் 2—12—53 காலை அபிகமன ஆராதனம் நடந்ததும் பரகாலமடம் ஸ்ரீகார்யம் ஸ்வாமி எதிர் கொண்டழைக்க ஸகல பிருதுகளுடன் பரகாலமடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ பரகாலஸ்வாமியால் ஸ்ரீ ஹயக்ரீவர் மங்களாசாஸனம் பண்ணிவைக்கப் பட்டார். அன்று ராத்ரி 8 மணிக்கு நம் ஸ்ரீகார்யம் ஸ்வாமியால் எதிர்கொண்டழைக்கப்பட்டு ஸ்ரீ பரகாலஸ்வாமி ஸகல பிருதுகளுடன் நம்மடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்ரீமாலோலன் மங்களாசாஸனம் பண்ணி வைக்கப் பட்டார். இந்த இரண்டு மடாதிபதிகள் சேர்க்கையைப் பார்த்து அந்நகரவாஸிகள் அளவிடமுடியாத ஆனந்தத்தை அடைந்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி 2 நாள் உபந்யஸித்தாயிற்று. 3-12-53 பகல் 1 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கரை அட்டபல்லக்கில் எழுந்தருளப்பண்ணி முன்போல் முதல் வகுப்பு ராஜமர்யாதைகளுடன் லௌகிக வைதிக ப்ரமுகர்களும் ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு அவ்வூர் நகர் எல்லை வரையில் கொண்டுவிட்டுத் திரும்ப நியமனம் பெற்றுக்கொண்டு போனார்கள். மைஸூர் நகரில் 65 நபர்களுக்கு ஸமாச்ரயணமும், 19 நபர்களுக்கு பரஸமர்ப்பணமும், 5 நபர்களுக்கு மந்த்ரோபதேசமும் நடந்தேறியது. 3-12-53 இரவு 7 மணிக்கு 8 மைல் தூரத்திலுள்ள பச்சிமவாஹினிக்கு எழுந்தருளினார். இங்கு 2 நபருக்கு ஸமாச்ரயணமும், 3 நபருக்கு சரணாகதியும் நடந்தேறியது. இங்கிருந்து 4-12-53 பகல் 2 மணிக்குப்புறப்பட்டு 13 மைல் தூரத்திலுள்ள மைஸூர் ராணிக்குச் சொந்தமான பல்லாரிசத்திரமெழுந்தருளி

ஞர். வழியில் ஸ்ரீரங்கபட்டணத்தில் உள்ள ஸ்ரீ அழகியசிங்கர் ப்ருந்தாவனத்தையும் நம் மடத்தைச் சேர்ந்த நிலங்களையும் பார்வையிட்டு செய்யவேண்டிய கார்யங்களை நியமித்துவிட்டு ஸ்ரீமதழகியசிங்கர் பல்லாரி சத்திரத்திற்கு எழுந்தருளினார். ராணியும் தன் பந்துக்களுடன் ஸ்ரீ அழகியசிங்கரைத் தெண்டனிட்டு ஸவரன் முதலிய காணிக்கைகளை ஸமர்ப்பித்து நியமனம் பெற்றுக்கொண்டுபோனாள். இங்கிருந்து 8 மைல் தூரத்திலுள்ள திருநாராயணபுரத்திற்கெழுந்தருளினார். மாலை 6 மணிக்கு நாராயணதீர்த்தத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு எழுந்தருளும் தருவாயில் திருநாராயணன் கோவில் கார்யஸ்தர்கள் சத்ரசாமராதி ஸகல மர்யாதைகளுடன் திருப்பரிவட்ட ப்ரஸாதங்களை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து எதிர்கொண்டழைத்து ஸ்ரீ அழகியசிங்கருக்குப் பரிவட்டாதிகளை ஸமர்ப்பித்து செல்வப்பிள்ளைத் திருக்கோயிலுக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போனார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ அஹோபிலம் ந்ருஸிம்ஹன் மங்களாஶாஸனம் ஆனதும் ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் அவதாரஸ்தலமான திருநாராயணபுரம் எம்பெருமான் மங்களாஶாஸனம் கிடைத்ததில் வெகு ஸந்தோஷத்தை அடைந்தவராய் நம்மாழ்வார் அவதாரஸ்தலமான திருநகரிக்கு எழுந்தருளுவதாக ஸங்கல்பித்துக்கொண்டார். ஸ்ரீமாலோலன் இரவு 8 மணிக்கு அவ்வூர் அஹோபிலமடத்திற்கெழுந்தருளி ஆராதனங்கள் கண்டருளினார். கோவிலிலிருந்து இரண்டு வேளையிலும் வழக்கப்படி ப்ரஸாதங்கள் வந்துகொண்டிருந்தன. அவ்வூரில் எழுந்தருளியிருந்தவரை காலை அபிகமனாராதனம் ஆனதும் திருநாராயணன் கோவிலுக்கெழுந்தருளி திருநாராயணன், செல்வப்பிள்ளை, யதுகிரி நாச்சியார், பாஷ்யகாரர் முதலிய ஸந்நிதிகளில் மங்களாஶாஸனம் செய்துவிட்டு கோயில் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி, ப்ருந்தாவனத்தில் ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனையும் ஸேவித்துவிட்டு மடத்திற்கெழுந்தருளும் [illegible]த்தை நேரில் ஸேவித்த

வர்களுக்குத்தான் மஹிமை தெரியும். வாகிந்த்ரியத்திற்கு விஷயமாகாது. பூர்வஜந்மஸுக்ருதமுள்ளவர்களுக்குத்தான் இந்த பாக்யம் கிடைக்கும். ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன் ப்ருந்தாவனத்தை மிகவும் விஸ்தாரமாகவும் ரம்யமாகவும் ஸுமார் 2000 ரூபாய் செலவில் கட்டுப்படி தகுந்த மநுஷ்யர்களைக் கொண்டு நியமித்து வேலை பூர்த்தியாகிவிட்டது. இது சிஷ்யர்களுடைய பாக்யவிசேஷமே. சீக்கிரத்திலேயே அவ்விடத்தில் மூலவர் உத்ஸவர் விக்ரஹங்களை ப்ரதிஷ்டைசெய்ய திருவுள்ளம் பற்றியாகியிருக்கிறது. 8–12–53ல் 43-வது பட்டம் நம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் சிஷ்யர்களால் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஷை உத்ஸவத்திற்கு எல்லா திவ்யதேசங்களிலிருந்தும் சிஷ்யகோடிகள் குழுமி இருந்தனர். அன்று காலை அபிகமனாராதனமானதும் ஸ்ரீமதழகியசிங்கருக்கு கோவில் கார்யஸ்தர்களால் திருநாராயணன் முதலிய ஸந்நிதியில் மிகவும் விசேஷமாக மங்களாஶாஸனம் பண்ணிவைக்கப் பட்டது. விசேஷ ததீயாராதனைகளானபிறகு பகல் 3 மணிக்கு மலையில் வீற்றிருக்கும் யோகந்ருஸிம்ஹனை மங்களாஶாஸனம் பண்ணியாயிற்று. 9–12–53ல் 34-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரம் 5 தினங்களாக வேதப்ரபந்த புராண பாராயணங்களுடன் நடத்தப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கரால் சாற்றுமுறையுடன் வெகு விமர்சையாக முடிக்கப்பட்டது. திருநாராயணபுரத்திலிருந்து ஸுமார் 35 மைல் தூரத்திலுள்ள சாலிக்ராமக்ஷேத்ரமாஹாத்ம்யத்தைக் கேள்வியுற்று அங்கு மாலோலனுடன் எழுந்தருளவேண்டுமென்று ஸங்கல்பித்துக் கொண்டு இங்கிருந்து 13 மைலிலுள்ள ஹொசஹொலலூர் லக்ஷ்மீநாராயணன் கோவிலுக்கு 13–12–53 பகல் 3 மணிக்குப் புறப்பட்டு எழுந்தருளினார். அக்கோயில் ராமாயணபாரதாதிகதைகளைக்காட்டுகிற சிலைகளுடன் வெகு அழகாக விளங்குகிறது. இக்கோயிலில் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதி, வேணுகோபாலன் ஸந்நிதி தனித்தனியாக விளங்குகிறது.

(தொடரும்)

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஜய ளு மாசி மீ 1954 ளு பிப்ரவரி–மார்ச் மீ

[உத்தராயணம்; சிசிர ருது; கும்ப மீ]

16–2–54	5௳	செவ்வாய்க்கிழமை	புஷ்யம், ஸ்ரீ அஹோபிலமடம் 37-வது பட்டம் (பிள்ளைபாக்கம்) ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
18–2–54	7௳	வியாழக்கிழமை	மாசி மகம்; ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டம் (இஞ்சிமேடு) ஸ்ரீஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் முதல் வருஷாராதனம்
25–2–54	14௳	வியாழக்கிழமை	அஷ்டமி திதி; அஷ்டகை
26–2–54	15௳	வெள்ளிக்கிழமை	அதிதி; அந்வஷ்டகை
27–2–54	16௳	சனிக்கிழமை	நவமி திதி
28–2–54	19௳	ஞாயிற்றுக்கிழமை	தசமி திதி
1–3–54	18௳	திங்கட்கிழமை	ஏகாதசி த்வாதசி திதித்வயம்; ஸர்வ ஏகாதசி
2–3–54	19௳	செவ்வாய்க்கிழமை	த்ரயோதசி திதி
4–3–54	21௳	வியாழக்கிழமை	ஸர்வ அமாவாஸ்யை
12–3–54	29௳	வெள்ளிக்கிழமை	கும்ப சுக்ல அஷ்டமி திதி
13–3–54	30௳	சனிக்கிழமை	கும்ப சுக்ல நவமி திதி
14–3–54	பங்குனிமீ 1௳	ஞாயிற்றுக்கிழமை	மீனசுக்ல ஏகாதசிதிதி; மீனரவி–8—36 (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)
15–3–54	2௳	திங்கட்கிழமை	த்வாதசி திதி; ஸர்வ ஏகாதசி

Regd. No. M. 4437.

28 FEB 1954

ஸ்ரீ:

ஸ்ரீஸாரபோதிநீ

முதல் பாகம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்கிற ஓர் அத்புத க்ரந்தரத்நத்தின் ஒளியாக விளங்கும் "ஸ்ரீஸாரபோதிநீ" என்கிற வ்யாக்யானம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனாலருளிச்செய்யப்பட்டது என்பது ஸர்வலோகவிதிதம். [illegible] இக் க்ரந்தம் விஜய வருஷம் தை மாதம் உத்திராடத்தன்று வெளியாகியிருக்கிறது. உயர்ந்த க்ளேஸ் பேபரில் அச்சிடப்பட்டது. 584 பக்கங்களுடன் கூடியது. இதன் விலை:—

1.	புல்காலிகோ பயிண்டு புத்தகம்—	ரூ	6-8-0
2.	ஆப்காலிகோ பயிண்டு புத்தகம்—	ரூ	6-0-0
3.	ர்ாப்பர் பயிண்டு புத்தகம்—	ரூ	5-8-0

அபேக்ஷிக்குமாஸ்திகளனைவரும் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு (பயிண்டின் விவரபூர்வமாக) எழுதி பெற்றுக்கொள்ளவும்.

1. ஸ்ரீகார்யம் ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபிலமடம்.
(Camp)..................

2. ஸ்ரீமாலோல முத்ராலயம்,
திருவள்ளூர்,
செங்கல்பட்டு ஜில்லா.

குறிப்பு:— ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு 8 அணா தள்ளி கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரை குறிப்பிட்டே அனுப்ப வேண்டும்.

புத்தகம் வேண்டியவர்கள் அதன் க்ரயத்தில் பாதியை முன்பணமாக அனுப்பி வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளவும். (தபால் செலவு தனி)

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobila-Mutt Sanskrit College, Madurantakam.